
# திராவிடநாடு

| மலர் 14 | விலை 2 அணா | இதழ் 9 |
|---|---|---|


"இந்தியாவிலேயே சென்னை மாகாண மக்கள்தான் குறைவாக சம்பாதிக்கிற நிலையில் இருப்பவர்கள். ஆனால் அவர்கள் செலுத்திக் கொண்டிருக்கிற வரியோ மிக அதிகம்!"

நிதி அமைச்சர் — சி. சுப்பிரமணியம்.

# அந்த யோசனை

மேயரின் மேதா விலாசத்தை உணர்த்தவில்லை, அந்த யோசனை—ஆனல், அவர் போன்ருர் மனதிலும், எத்தகைய கருத்து அலைமோதிக் கொண்டிருக்கிறது என்பதையே வெளிப்படுத்துகிறது.

தட்சிணப்பிரதேசம்—அமைக்கப்பட வேண்டுமாம், கன்னடமும், கவின் மலையாளமும், தமிழும் கொண்டபகுதிகளைச் சேர்த்து. சுந்தரத்தெலுங்கைச் சேர்க்கவில்லை, சீமான்! சிறுவாரோ, கோபாலரெட்டி எனும், அச்சத்தால்.

மைசூர் முதலமைச்சருக்குத் தேனீரும் தந்து இந்த ஆலோசனையையும் அளித்துள்ளார், செட்டி நாட்டுக்குடும்பத்துஇளவல், மேயர் சிதம்பரம் கூற்றைக்கேட்ட அனுமந்தையா 'யோசிக்க வேண்டிய விஷயம். நூதனமான இக்கருத்தைப்பற்றி மக்களின் எண்ணம் எப்படியிருக்கிறதென்று அறிய வேண்டும்'' என்று சீமானின் மனம் நோகாமலும், தான் சார்ந்திருக்கும் கூடாரம் கொட்டிடாமலும், பதிலளித்திருக்கிருர்.

தனிநாடு கேட்கிறோம், நாம்! அந்தத் தனி நாட்டுக்கு, நான்கு மொழிகளையும் குறிக்கும் 'திராவிடம், எனும் பெயரைக் குறிப்பிட்டு, திராவிட நாடு திராவிடருக்கே! என்று முழக்கமிட்டு வருகிறோம்.

செட்டி நாட்டுமாளிகை, அறியாத முழக்கமல்ல, இது; அந்த அளவுக்கு பண ஓசை அவர்கள் காதையும் செவிடாக்குமென்று, கருதவில்லை நாம். ஆயினும், ஏதோ, ஒரு அச்சம் அதனல் 'திராவிட நாடு, என்று சொல்ல வில்லை. அச்சத்துக்குக் காரணம், திராவிடநாடு கேட்போர், பொதுவுடைமைக் கருத்துக்களை இதயத்தில் தாங்கியவர்களாயிற்றே, என்பதுபோலும். வளர்க அந்த அச்சம்!

*

எவரெவர் நம்மைக் கண்டால் அஞ்சுகின்றனரோ, அவர்கள் மனதிலும், இந்த நான்கு வட்டாரங்களும், உயர்தனிப் பண்பாடுள்ளவை என்பது தெரியாமலில்லை. இதையே, மைசூர் அனுமந்தையாவும், மனமார உணர்ந்து பேசுகிருர்! டில்லியைவிட—சென்னை, அருகில் மட்டுமல்ல; மற்ற வகைகளிலும் நெருக்கமுள்ளதாகத் தெரிவதில் வியப்பில்லை. கோதுமைக் காடல்ல, தமிழகம்! புரியாத மொழி அல்ல, தமிழும்! ஆந்திரம் நம் காதுக்கு அளிக்கும் இனிமை, கேரளரைக் காணும்போது நமக்கேற்படும் சகோதரப் பாசம், கன்னடியர் பகுதிக்குச் சென்ருல் காணும இன உணர்வு—நிச்சயம் டில்லியில், கிட்டாது நமக்கு! அதேபோல ஐக்கியமாகாணத்தைக் காணும்போது ஏற்படும் ஆனந்தம், பாஞ்சாலத்தின் மீது உண்டாகும் பாசம், பம்பாய் மீது ஏற்படும் மோகம், மத்ய பிரதேசத்தாரைச் சந்திக்கும்போது ஏற்படும் மன மகிழ்ச்சி—நம்மவர்களைக் காணும் போது. டில்லிக்கு உண்டாகத்தான் செய்யாது! அவர்களோடுபேச, இந்தி போதும்; நம்மோடு உரையாட....!!

இந்த ஒற்றுமை,

மனதிலே மலரும் பாசம்,

ஒரு குடும்பம் எனும் உணர்வு,

ஆகியவைகளே, திராவிட நாடு திராவிடருக்கே என்கிற முழக்கத்தின் மூலகாரணமாகும். வியாக்யானமளிப்போரும், எச்சரிக்கை செய்வோரும் ஏராளமாக இருக்கலாமே ஒழிய, எவரும், அடிப்படையை மறுக்க முடியாது!

அதுமட்டுமல்ல! வடக்கு எப்படி தெற்கை ஏமாற்றுகிறது என்பதைப் பற்றி நிதியமைச்சர் சுப்பிரமணியம் குமுறுவதுபோல, ஓமந்தூரார் மேல் சபையில் வெளிப்படையாகக் கண்டிப்பதுபோல, காங்கிரசிலுள்ள எம். எல். ஏக்களில் பலர் அண்மையில் நடைபெற்ற ஐந்தாண்டுத்திட்ட விவாதத்தில் 'டில்லியோடு போட்ட சண்டையில் தெற்கு தோற்றுவிட்டது, என்று கூறுவது போல, கன்னடத்திலும்' கேரளத்திலும், ஆந்திரத்திலும் குமுறல்கள் எழும்பாமலில்லை. விருந்துண்ட அனுமந்தையாவே, டில்லியின் ஓரவஞ்சனை குறித்து, எத்தனையோ தடவைகள் எடுத்துரைத் திருக்கிருர்! எனவே இப்படிப்பட்டவர்களெல்லாம் அவர்கள் செல்வர்களானுலும், வாழ்க்கைத் தொல்லை களில்லாததால் வேறு பலவிஷயங்களைப்பற்றி யோசிக்கும் ஆற்றலுள்ளவர்களானுலும், அரசபீடத்திலமர்ந்து அன்றன்ருடம் மத்ய சர்க்காரின் தலையீடுகளைத் தாங்கும் சிரமத்தை அனுபவிப்பவர்களானுலும்; சமயம் நேரும்போது சலிப்புடனே அல்லது கொஞ்சம் மனந் திறந்தோ பேசத் தயங்குவதில்லை.

காண்கிறோம், நாம்! கேள்விப்படுகிறோம், அடிக்கடி!

நானூறு கேட்டு இருநூறு பெற்று வந்துள்ள, சென்னை சர்க்காருக்குள்ள வேதனை கொஞ்சமா! நிச்சயம் துயரப் படாமலா யிருப்பார்கள்! அப்படி இவர்களுக்குப் 'பணம் இல்லை' என்று கை விரிக்கும், டில்லியாவது திறமையோடு ஆள்கிறதா? எத்தனை யெத்தனை ஊழல்களும், மோசடிகளும் கேள்விப் படுகிறோம், அடிக்கடி, மாதா மாதம், ஒவ்வொன்று சித்திரத்தைப் பாருங்கள், இந்த ப... ல இயக்க வரலாற்றை எழுதுவதற்காக இரண்டாண்டுகளுக்கு முன் ஒரு குழுவை நியமித்து. 3,70,000 ரூபாயை இது வரையில் செலவு செய்தார்கள். விளைவு என்ன தெரியுமா! இப்போது கமிட்டியைக் கலைக்கப்போகிருர்கள்—புத்தகம் தீட்டி முடிந்துவிட்டதே? என எண்ணுவீர்கள்—இல்லை! அதற்கான குறிப்புகள் மட்டுமே, ரூபாய் நான்கு லட்சத்தில், எடுக்கப் பட்டதாம். கலைக்கப்போகிறதாம் இந்த ஆண்டுக்குள்! கமிட்டியை! காரியமோ முடியவில்லை—பணம், காலி!

இன்னென்று—சர்க்கார் வரவுசெலவுக் கணக்கு பரிசீலனைக்கமிட்டி இம் மாதக் கடைசியில் ஒரு ஊழலைப்பற்றி தகவல் தருகிறது. டில்லியின் தபால் தந்தி இலாகா, கல்கத்தாவில் இரண்டு கட்டிடங்களை இலாகாவின் உபயோகத்துக்கென வாடகைக்கு 1948ல் எடுத்து, மாதாமாதம் ரூபாய் 7000 கொடுத்து வந்தார்களாம். 1949ல் அந்தக்கட்டிடங்கள் பிரயோசனமில்லையென்று காலிசெய்தும், இது வரை மாதா மாதம் வாடகைக்கொடுக்கப்பட்டு வந்ததாம். இதனுல் இது வரை 4, 60, 000 ரூபாய் காலி—கஜானுவுக்கு! இதைக்குறிப்பிட்டு,

அநியாயம்

பொறுப்பிலாதது.

சர்க்காரின் பணத்துக்குக்கேடு

என்று வன்மையாகக் கண்டித்துள்ளது, கமிட்டி. இந்தமாத 'கோட்டா' இது!!

இவவளவு அழகான மத்யபீடம்.பிறமாகாணங்களுக்கு ஆலோசனைதரவும்-அடக்கிக் கண்டிக்கவும்,ஏன்? இந்தியைத்திணிக்கவும் ஏனையோர் தலையில் குட்டவும்கிளம்புவானேன்? சென்னைப் பல்கலைக்கழகத்துணைவேந்தர் அறிஞர் லட்சுமணசாமி, அண்ணுமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் நாராயணசாமி, திருவாங்கூர் பல்கலைக் கழகத்துணைவேந்தர் ஆற்காடு ராமசாமி — இவர்கள்கூட கண்டித் தனரே காரசாரமாக, டில்லியின் போக்கு குறித்து!

ஒருபோது வாய்மூடி மௌனியாயிருந்தோர் — இப்போது இப்படியெல்லாம் பேசுகிருர்கள் — சிதம்பரம் போன்றவர்கள் 'தட்சிணப் பிரதேசம்' என்கின்றனர் — அனுமந்தையா 'மக்களின் கருத்தைக் கேட்கவேண்டும்' என்கிருர்.

இப்படி அவரவர்கள் அச்சத்தோடு, உண்மைகளை ஒளித்தும் மறைத்தும் உரைக்கிருர்களே யொழிய, அவர் தம் இதயங்களில் எதிரொலிப்பது என்ன, என்பதை நாடு உணராத நிலையிலில்லை! நாமும் புரிந்து கொள்ளாமலில்லை!

*

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

காஞ்சி] 4—9—55 [ஞாயிறு

# ஹாலோவே, சிரிக்கிறான்!

———

*அமெரிக்காவிலுள்ள ஆன்றோ ரின் சபையிலே, ஆபிரிகத் தூதன் ஹாலோவே என்பான் எடுத்துச் சொல்லியிருக்கிறான் கிண்டலோடு,* "என்னமோ! எங்கள் நாட்டில்தான், நிற வெறி காட்டப்படுகிறது என்று கண்டிக்கிறீர்களே. இந்தியாவில் என்ன அழகு வழிகிறதாம்! பெரிய தலைவர் நேரு—அவரது தலைமையிலுள்ள இந்தியாவில் ஐந்து கோடி தீண்டாதவர்கள் இன்னும் இருக்கிறார்களே! அதற்கென்னச் சொல்லுகிறீர்கள்?"

*இந்தக் கேள்வியை அறிந்த 'இந்து'வுக்குக் கோபம் வந்துவிட்டது.*

*பேனாவை எடுத்து, காரசாரமாகத் தலையங்கம், தீட்டியிருக்கிறது ஆக 30-ம் தேதி ஏட்டில்.*

உண்மைதான்!

மறுக்கவில்லை!

ஆனால்......

சட்டங்கள் மூலமும், ஆதரவுகள் வழங்கியும், அவர்களுக்கு வழிகள் செய்கிறோமே.

*என்று கேட்கிறது — இந்தியாவில் இந்த முறைகள் அமுல் செய்யப்படுகிறதாம், ஆதாரங்களோடு எடுத்துச் சொல்லுகிறது. ஆனால் நல்லவேளையாக, மறுக்கவில்லை, 'உண்மைதான். ஆனாலும்...' என்று பீடிகையுடன், தீட்டுகிறது, இவைகளை.*

*ஆபிரிகாவில் நிறவெறிகொண்டலையும் ஸ்டைர்டம் ஆட்சியின் போக்கைக் கண்டியாதவர், இரார். அவனது தூதனை ஹாலோவே தன்னாட்டில் இழைக்கப்படும் அநீதியைக் கண்டிப்போரின் கவனத்தை இந்தியாவின்மீது திருப்புவதால், அவனைப் பாராட்டார் எவரும். ஆனால், அவன் ஏளனம் செய்யும் அளவுக்கு நிலைமை உளதே என்று வெட்கப்படாமலிருக்க முடியாது—நாம்.*

*ஹாலோவே கேட்கிறான்,* "ஐயா, எங்கு போனாலும், இப்படி எங்கள் நாட்டில், நாங்கள் செய்வது அக்கிரமம் என்று பேசுகிறார்கள். அப்படிப்பேசுவோர், நிறவெறிக்கு ஆளான நீக்ரோக்கள் மட்டுமல்ல, வெள்ளைத்தோல்கொண்ட, எங்கள் பங்காளிகள் கூடப் பேசுகிறார்கள்—ஐயோ, நிற வெறியா? இருபதாம் நூற்றாண்டிலா, ஆண்டவனுக்கு அடுக்குமா? அக்கிரமம் அல்லவோ, என்று, கண்டிக்கிறார்கள். கருப்பு நிற சாதிக்காரர்களை அண்ணன் தம்பிகள் போலவன்றோ நடத்தவேண்டும் என்று யோசனை சொல்லுகிறார்கள். அவர்களையே கேட்கிறேன் — அண்ணன் தம்பிகளாக நீக்ரோக்களை நடத்துவது சரியய்யா. கொஞ்சம் அவர்களையே அத்தான்களாக்கிக்கொள்ளுங்களேன், பார்க்கலாம்."

*கேலியோடுதான் கேட்கிறான் ஹாலோவே.*

*அத்தான்களாக்கிக்கொள்ளுங்களேன், பார்க்கலாம்! என சவால் விடுகிறான்.*

*ஏனென்றால், இப்படி நிறவெறிக் கொடுமை குறித்துக் கண்டிக்கும் பேரறிஞர்கள்—நிபுணர்கள்— உலகியல் தலைவர்கள் இருக்கிறார்களே ஒழிய, கருப்பு-வெள்ளை நிற பேதம் ஒழிய, நடைமுறையில் செய்து காட்ட முன்வருவோர்—மிகக் கொஞ்சம்.*

*நிற பேதம் ஒழியவேண்டுமென்றால், கருப்பரை, வெள்ளை மாதர் மணக்கவேண்டும். வெள்ளையரும், கருப்பு மாதரை விரும்பித் திருமணம் செய்துகொள்ளவேண்டும்— செய்கிறார்களா என்று கேட்கிறான் ஹாலோவே.*

*செரட்ஸி காமா, ஒரு வெள்ளை மாதை மணந்ததற்காக அரச உரிமையையே இழக்கச் செய்தது, இங்கிலாந்து. காலஞ்சென்ற கிரிப்ஸின் மகளார் ஒரு கருப்பரை மணந்தது கண்டு, பிரிட்டிஷ் ஏடுகள் மிரண்டன.*

*மிரட்சியும், புரட்சியும்தானே உண்டாகிறது, இதுபோல கருப்பும் வெள்ளையும் கலக்கும்போது.*

*அதைக்காண்பவன் ஹாலோவே, ஏளனம் செய்கிறான். வாய்ச் சொல்லில் வீரரடி — என்கிறான், கிண்டலோடு,*

*அப்படிச் சொல்லுபவன் அக்கிரமக்காரன் என்பதால் ஆத்திரம் வருகிறதே ஒழிய, அவன் கிண்டல் செய்கிற அளவுக்கு நிலைமை இருக்கிறதே என்பதற்காக வெட்கப்பட்டுத்தான் தீரவேண்டும்.*

*பளபளக்கும் 'பியூக்' காரிலே வந்திறங்கி, சுற்றிநிற்போர் துதிபாட, சேரியைச் சுற்றிப்பார்த்துவிட்டு, 'நிலைமை மோசம்தான். இதை நீக்க சர்க்கார் எல்லா ஏற்பாடுகளையும் செய்யவேண்டும்' என்று அறிவுரை வழங்கிவிட்டு; 'ஆத்து'க்குப் போனதும், அடி அம்சா, பறச்சேரிக்குப் போயிருந்தேண்டி—என்னமோ அங்கு போயிட்டு' வந்ததிலேருந்து வாயெல்லாம் கொமட்டறுப்பலேயிருக்குது—கொஞ்சம் ஓவலோ; ஹார்லிக்ஸோ கலந்து கொண்டா என்று கேட்டு அதை வாங்கிப் பருகிவிட்டு ஆயாசத்துடன் சாய்ந்தும் 'ஹரிஜனங்களுக்கு சேவைசெய்வது ஹரிக்கே சேவை செய்வதுபோலன்றோ, என்று பேசியும் திரியும் 'பாஷ்யம்களை'ப் பார்த்து நாமும் கேட்கலாம், "ஐயன்மீர், பழங்குடி மக்களை அண்ணன் தம்பிகளாகக் கருதச் சொல்லுகிறீர்களே அதற்குப் பதில் அத்தான்களாக்கிக் கொள்ளுங்கள் பார்க்கலாம்" என்று. கொடுக்கல் வாங்கல் செய்ய, எந்த பெரியசாதிக்காரர் முன்வருகிறார். பேசுவார்—மாலை பெறுவார் — புகைப்படம் வெளிவரும், ஏடுகளில். ஆனால், அவர்களுடன் உறவுகொண்டு, சாதியும் பேதமும் சாகச்செய்ய முன்வருபவர்கள்யார்?*

*தீண்டாமைக்காகப் பாடுபடுவது பார்ப்பனியத் தலைவர்களுக்கும் செல்வச் சீமான்களுக்கும் ஒரு 'பாஷனா'கிவிட்டது.*

*அதனால்தான், இதுபற்றி எவ்வளவு பேசப்பட்டாலும், அரிஜன சேவா சங்கங்கள் ஆயிரம் தோன்றினாலும், இன்னும் தீண்டாமை ஒழியவில்லை; சமூகத்தில் அவர்களுக்குள்ள தாழ்வும் வறுமையும் நீங்கவில்லை.*

*அஸ்ஸாமுக்குச் சென்றுள்ள நேரு, அங்கே வாழும் ஆதிக் குடிகளான நாகர்தம் மத்தியில் சென்று, "ஜாதி பேதங்களே நமது முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டை. அவைகளை ஒழித்தால்தான், நாடு முன்னேறமுடியும்" என்று முழக்கியிருக்கிறார்.*

(14-ம் பக்கம் பார்க்க)



கிராம்வெல்.

# மக்கள் கரமும் மன்னன் சிரமும்



சார்லஸ்

**சி.என். அண்ணாதுரை.**

மன்னன் தாக்கீது அனுப்பினன், ஐவரைக் கைது செய்யும்படி, மாமன்றம் மன்னன் செயல் சட்ட விரோத மானது என்று தாக்கீது பிறப்பித்தது.

இரு அரசுகள்! நாடு, எதை ஏற்றுக்கொள்வது என்பதை இனிக் களம்தான் தீர்மானிக்கவேண்டும்.

ஐவருக்கு வந்த ஆபத்து, நாட்டு மக்களைப் போர்க் கோலத்தில் கொண்டு வந்து விட்டது. நகரம், புயலுக் குரிய நிலைமையில் இருந்தது. ஆபத்து தன்னை அணுகும் என்ற அச்சம் மன்னனுக்கு! மன்னன் தன் குடும்பத் தாரை அழைத்துக்கொண்டு, ஊரார் அறியா வண்ணம் இலண்டன் நகரைவிட்டு, வேறிடம் சென்றுவிட்டான்

ஐவர், மன்னனை விரட்டிவிட்டனர்! மக்கள் மகிழ்ச்சிப் பெருக்குடன் ஐவரை வரவேற்றனர்.

தேம்ஸ் ஆற்றிலே, படைக்கலங்கள்! கரையெல்லாம் உறுதி படைத்த வீரர்கள்! ஐவர் வருகின்றனர், மாமன் றம் நோக்கி, ஊரே திரண்டு வருகிறது! வெளியூர் இருந் தெல்லாம், மக்கள் கூட்டம்.

மன்னன், மக்கள் சீற்றத்துக்கு இடம் தராத இடம் நாடினன்—வின்சர் எனும் ஊர் போய்ச் சேர்ந்தான். ஐவர் மாமன்றத்தில் எப்போதும் போல் அமர்ந்தனர். போர் மூண்டால், வெற்றி எவர் பக்கம் என்பதை அறிவிக்கும் சம்பவமாகிவிட்டது, ஐவர் வெற்றி.

இனிப் போரிட்டுத்தான் பிரச்னையின் முடிவு காண வேண்டும், என்ற கட்டம் தோன்றிவிட்டது.

ராணி எனிரிடா, குடும்ப நவமணிகளையும் அணி களையும் எடுத்துக்கொண்டு, ஐரோப்பா சென்று, விற்று, ஒரு கலம் நிறைய போர்க் கருவிகளை அனுப்பியாகி விட்டது! மன்னன், தன்னை அண்டிப் பிழைக்கும் பிரபுக் களுடன், மந்திராலோசனை நடத்தி, போர்த் திட்டம் தீட்டினன். மாமன்றம், செயலாற்றுமலில்லை! துறை முகப் பட்டினங்களிலே, மாமன்றச் சார்பினர், திரண்டனர்.

ஹல் என்ற ஊரிலே குவித்துவைக்கப்பட்டிருந்த வெடி மருந்துக் கிடங்கு, மாமன்றத்தார் வசமாயிற்று, அதைக் கைப்பற்ற வந்த மன்னனை கிடங்குக்குள்ளே நுழையக் கூடாது என்று காவலாளி கள் தடுத்து நிறுத்தினர். இனியும் என்ன செயல் வேண்டும்! மாமன்றத்தின் கட்டளையின்படி நடந்து கொள்பவர்கள், மன்னனைத் தடுத்து நிறுத்த முன்வந்து விட்டனர்!

மன்னன் நாட்டிங்காம் எனும் நகர்சென்று, போர்க் கொடி உயர்த்தினன்.

மக்கள் மீது மன்னன் போர் தொடுத்துவிட்டான்! எனவே மன்னன், மாபெரும் துரோகியானன்" என்று மாமன்றம் அறிவித்தது. நாடு அறை கூவலை ஏற்றுக்கொள்வோம் என்றது. படைகள், களம்புகுந்தன உள்நாட்டுப் போர் துவங்கிவிட்டது. தத்துவம் பேசிப் பயன்காணுத மன்னன், இனி இரத்தம் கொட்டி, வெற்றிதேடக் கிளம்பிவிட்டான்.

மக்கள் ஆர்வத்துடன் மாமன்றம் திரட்டிய படையில் சேர்ந்தனர். வெள்ளிச் சாமான்கள், தங்க நகைகள், பணம், கொண்டுவந்து குவித்தனர் மக்கள். அவைகளை வைத்திருக்கப் போதுமான இடம் கூட இல்லையாம். அளவு அவ்வளவு, ஆர்வம் அத்துணை! கிழமைக்கு ஒரு நாள், உணவருந்தலாகாது, அதனல் மிச்சப்படும் பணத் தைச் சேர்த்து, மாமன்றத்திடம் தரவேண்டும் என்றுகூட மாமன்றத்தார் ஒரு ஏற்பாடு செய்தனராம். போர்ச்செல வுக்கான பணம் குவிந்தது மட்டுமல்ல, ஒரு உயரிய கொள் கைக்காகப் போரிடுகிறோம், உயிர் இழப்பினும் கவலை யில்லை, என்ற தூய எண்ணம்; வீரம், ததும்பும் மக்கள் குவிந்தனர்.

இலண்டன் வியாபாரக் கோட்டம் — மாமன்றத்துக் குப் பெருந்துணையாக நின்றது.

கடற்படை பெரிதும் மாமன்றத்தை ஆதரித்தது.

துறைமுகப்பட்டினங்கள் பலவும் மாமன்றச் சார்பில் இருந்தன.

எனவே வெளிநாடுகளிலிருந்து ஆள் அம்பு, மன்ன னுக்காக வரவழைப்பது கடினமான காரியமாகிவிட்டது.

பிரபுக்கள் புடைசூழ நின்ற மன்னனிடமும், பணம் திரண்டது, படையும் அமைந்தது. ஆனல் கொள்கை மட்டுமே தரவல்ல நெஞ்சுஉரம் மன்னன் படை வரிசை யில் இல்லை. ரூபர்ட் என்பார் போன்ற திறமிகு தளபதி கள் இருந்தனர், எனினும் படைவீரரிடம் ஆர்வம் இல்லை.

**1642**-ம் ஆண்டு துவங்கிய உள்நாட்டுப் போர், **1645**-வரையில் நடைபெற்றது. பயங்கரமான சண்டைகள். இருதரப்பிலும் கொட்டப்பட்ட இரத்தம் கொஞ்சமல்ல! வீரச் செயல்களுக் கும் குறைவில்லை. இருதரப்புக்கும் வெற்றி தோல்வியின் றிச் சிலகாலம் நடைபெற்றசமர், மாமன்றப் படைவரிசை யிலே பணியாற்றிய மாவீரன் ஆலிவர்கிராம்வெல் என்பவரின் திறமையாலும் தீரச்செயலாலும், களம் அமைக்கும் முறை யாலும், தாக்குதலை வகுத்திடும் திட்டத்தின் நேர்த்தி யாலும், மாமன்றத்துக்குச் சாதகமாகத் திரும்பிற்று. மார்ஸ்டன் மூர், நியூபரி, நேஸ்பி, எனும் இடங்களில், மாமன் றத்துக்கு மகத்தான வெற்றி கள் கிடைத்தன. கிராம்வெ லின் கீர்த்தி பரவிற்று, மன் னன் படைவரிசையில் பிளவும், போரிடுவோர் உள்ளத் தில் கிலியும் ஏற்பட்டது.

வெற்றி கேட்டு மகிழ்ந்த மக்கள், மனவேதனை கொள்ளும் சம்பவமும் இதுபோது நடைபெற்றது, 1643-ல் ஹாம்டன், தீரமாகக் களத்தில் போரிட்டுக் கொண்டிருக்கையில், இறந்துபட்டார்! வாழ்நாள் முழு வதும் மக்களுக்காகப் பாடுபட்ட மாவீரன் மறைவு, நாட் டுக்கு ஈடுசெய்ய முடியாத பெரு நஷ்டம் எனினும், வர லாற்றுக் சுவடியில் மட்டுமல்லாமல், மக்கள் உள்ளத்திலே

(16-ம் பக்கம் பார்க்க)

# துறவி—காவியில்லை!

தம்பி,

இயற்கை தீட்டித் தந்துள்ள "எழிலோவியம்' குற்றாலம், கண்டேன், களித்தேன் என்று கூறினேன் அல்லவா, நினைவிருக்கிறதா, அருவியில், 'தருமபுரம்' கண்டேன் என்று குறிப்பிட்டிருந்ததை. அந்தத் 'துறவி'யைக் கண்டதும், என் எண்ணம், துறவறத்தின்மீது சென்றது. இதோ பாரேன், நாமெல்லாம் படுகிற தொல்லைகளை. திராவிடம் ஏன் தனிநாடாக இல்லை, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலும் நமது பலம் பொருந்திய மந்திரிமார்கள், டில்லியால் இளித்த வாயராக்கப் பட்டுவிட்டார்களே, என்ன வெட்கக் கேடு இது, சேலத்து இரும்பும் நெய்வேலி நிலக்கரியும் நமக்குப் பயன்படவில்லையே, எவ்வளவு அநீதி இது, என்றெல்லாம் கவலைப்படுகிறோம்; கோவாவில் படுகொலை, பீகாரில் சித்திரவதை, பஞ்சாபில் அடக்குமுறை, என்ற இவைகளைப்பற்றி எல்லாம் எண்ணுகிறோம், நெஞ்சில் பாரம் அதிகமாகிறது, இதோ 'தருமபுரம்' துறவியானதால், இத்தகைய சுமைகளைத் தாங்கித் தத்தளிக்கவேண்டிய தொல்லைக்கு ஆளாகாமல், மந்திரமாவது நீறு! சுந்தரமாவது நீறு! என்று கீதமிசைத்துக்கொண்டு (மெல்லிய குரலில் — மனதுக்குள்ளாகவே சில வேளைகளில்) உமைபொரு பாகனை எண்ணிப் பெருமிதம் கொண்டு, சிவானுக்கிரகத்தைப் பருகி, பொன்னார் மேனியராக விளங்கி,

காமாட்சி

மீனாட்சி

விசாலாட்சி

நீலாயதாட்சி

சிவகாமசுந்தரி

குழல்வாய்மொழி

குவளைக்கண்ணி

கோமதி

குமாரி

என்று அம்மைக்கு அஞ்சலி செலுத்தியும், திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளே! என்றும், பாகு கனிமொழி மாது குறமகள் பாதம் வருடிய மணவாளா! என்று முருகனைத் தோத்தரித்தும், 'அருக்கு மங்கையர் மலரடி வருடியும் கருத்தறிந்தபின் அரைதனில் உடைதனை அவிழ்த்தும் ஆங்குள அரசிலை தடவியும் அழியாதே' என்று அறநெறி உரைத்துக்கொண்டும், திருக்கோலம் காட்டியும், அடியார் தரும் காணிக்கையைக் குவித்துக் கொண்டும், கோலோச்சமுடிகிறது. பண்டங்களின் விலை வீழ்ந்தாலும் ஏறினாலும், மேட்டூர் அணையில் நீர் மட்டம் குறைந்தாலும் கூடினாலும், எதுபற்றியும் கவலையின்றி, இவைகளைப்பற்றி எண்ணி ஏங்கிடச் 'சாமான்யர்கள்' உளர், நாம் சதாசிவத்தின் பூலோகப் பிரதிபிம்பமாகக் காட்சி தருவோம் என்று கூறாமற் கூறிக் கொலுவீற்றிருக்க, அவரால் முடிகிறது. துறவி! எனவே அவருக்கு எதுவும் துரும்பு! வாழ்க்கை கரும்பு போல் இனிக்கும்போது, ஏன் அவர் ஏழையர் உலகுக்கு வந்துற்றிடும் இடர்ப்பாடுகள் பற்றி ஏக்கம் கொள்ளப்போகிறார்! விடை ஏறும் எம்மான், அவருக்கு அளித்துள்ள பதவி, இருக்கும்போது பஞ்சமும் பட்டினியும், பசியும் கொட்டுவதாலே பதறிப் பரதவிக்கும் பாமரரின் நிலையிலா அவர் இருக்கவேண்டும்! செச்சே! சிவனருள் சாமான்யமோ! செல்வருக்கும் சில பல மனக்குறை எழக்கூடும்! கோட்டையில் கொடிகட்டி ஆள்வோருக்கும் சிற்சில வேளைகளில் தொல்லையும் துயரமும் தாக்கிடும். இந்தத் துறவிக்கோ, எல்லாம் இன்பமயம், எங்கும் இன்பமயம்! காலையிலே மாலையிலே, காகம் கரையும் வேளையிலே, மடத்திலே, வேறு இடத்திலே, எங்கும், சிவானுபவம், சுகானுபவம்! துறவிக்கன்றோ கிட்டும் இத்தகைய தேன் சொட்டும் வாழ்க்கை!

தம்பி, துறவிக்குக் கிடைக்கும் இந்த 'இன்பவாழ்வு' பற்றிய எண்ணம், எனக்கு மேலிட்டதால், நான் முன்னாளில் துறவியின் நிலை இருந்த தன்மைபற்றியும், இந்நாளில் துறவி என்பது எத்தகைய பக்குவமான பதவியாக மாறிவிட்டது என்பதுபற்றியும் எண்ணிடலானேன். அரண்மனையில் பிறந்த இளங்கோவும் துறவிதான்! இதோ இன்று அடுப்படி உழன்றோர்கூட துறவிகளாவதன் மூலம், அரண்மனை அந்தஸ்த்துப் பெறுகிறார்கள் துறவி இளங்கோ தமிழில் காவியம் இயற்றினார்—சிலம்பு ஒலிக்கிறது! இன்றையத் துறவிகளின் சன்னதியில்,

நூபுரம் கலீர் கலீரென

நேத்திரம் சுரீல் சுரீலென

பாத்திரம் பளா! பளாவென!

தோத்திரங்கள் நடைபெறுகின்றன என்று கேள்விப்படுகிறோம்.

ஒரு வேடிக்கை தெரியுமா, தம்பி! துறவி — தவசி — என்று இரு சொற்கள் கேட்கிறோமல்லவா— முன்னது பெரிதும் தமிழகத்துக்கே உரிய தனிப்பண்புக்கு உறைவிடமாகவும், பின்னது ஆரிய கலாச்சாரத்தின் இருப்பிடமாகவுமே, ஆதி நாட்களிலேயே இருந்து வந்திருக்கிறது.

இன்பமான வாழ்க்கையில் இருப்பதற்கான நிலை இருந்து, அதனைத் துறந்திடும் பெரியோன், துறவி! அத்தகைய துறவிகளைத் தமிழகம் அந்நாளில் கண்டது. கொலு மண்டபத்தில் வீற்றிருக்கும் வாய்ப்பும், கோகில மொழியாள் கொஞ்சிட, மஞ்சமதில் மிஞ்சு சுகம் பெறுவதற்கான வசதியும், நிரம்ப இருந்ததைத் துறந்தார் இளங்கோ அடிகள்! பட்டுப் பட்டாடையைத் துறந்து, காவி அணிகிறார்! வரிகட்டினரா? கப்பப் பணம் தப்பின்றி வந்து சேர்ந்ததா? கரிப்படையில் குறைவேதேனும் உளதோ! வேற்படைத் தலைவனைக் காணோமே, எங்கே? — என்று கேட்டு அரச காரியத்தைக் கவனித்துக்கொண்டிருக்கும் நிலை இருந்தது, இதனைத் துறந்தார், செந்தமிழின் சிறப்பினை விளக்கிடும் சிலம்பு சமைத்தளித்த சீலர். கணிகையர் குலத்துதித்த மணிமேகலை, துறவுக்கோலம் பூண்டு மக்களின் பசிப்பிணி போக்கிடப் பாத்திரமேந்தி நின்றதுடன், மக்கள் தம் பவப்பிணி ஒழித்திடும் மார்க்கம் போதித்து வந்ததுபற்றிப்படித்துப் பெருமிதம் கொள்கிறோம். துறவு இத்தகைய தூய்மைக்கு நிலைக்களனாக, தொண்டுக்கு வாய்ப்பாக, இருந்தது, எல்லாத் துறையிலும் செம்மை கண்ட நந்தம் நாட்டிலே தான்! ஆனால் ஆரிய பூமியிலோ! தவசிகள் உண்டு! துறவிகளின் எண்ணிக்கையைவிட மிக அதிகம்! துறவிகள் மனிதருள் மனிதராக, ஆனால் மாமனிதராக இருந்து வந்தனர்! ஆரியத் தவசிகளோ, மனிதருள் தெய்வங்களெனக் கருதப்பட்டு வந்தனர். காடு சுற்றியும் கானாற்றின் கீதம் கேட்டு இன்புற்றும், கல்சொல்லும் கவிதையையும் காரிருளைப் போக்கிடும் மதி தரும் அன்புரையையும் மக்களுக்கு உய்யும் வழி கிடைத்தற்கான அறநெறியையும், அருளினர், நந்தம் நாட்டுத் துறவிகள்! அடி வீழ்ந்து வணங்கிட மன்னர்களும், கேட்ட போது நவநிதி கொட்டித் தரக் காவலரும், ஆடிடும் அணங்குகளும் பாடிடும் பாவையரும், பணிவிடைக்காகப் பட்டுடுத்திப்பார்வையால் கொல்லும், பசுங்கிளிகளும், தேவை என்று நமது துறவிகள் கேட்டதில்லை —அந்நாளில்! மலரம்பு பட்டதால் துடித்துக் கிடக்கும் பட்டத்தரசர்களுக்கு, மட்டற்ற மகிழ்ச்சியூட்டும் மாமந்திரம்கூறிடும் ஆற்றலற்றவர்கள் நமது துறவிகள்! ஆரியத் தவசிகளோ! பர்ணசாலைகள், ஆற்றோரத்தில் சோலையின் நடுவில், சாலைப் பக்கத்தில்! தென்றல் சாமரம் வீச, தேமாங்கனி குலுங்கும் பூங்காவிலிருந்து கிளியும் நாகணவாய்ப்புள்ளும், குயிலும் புறாவும் பிறவும் இசைபயில, மான்கள் துள்ளித்திரிய, மன்னர்கள் கைகட்டி வாய்பொத்தி நின்று, கேட்டது தர, பணிவிடைப் பெண்கள் புடைசூழ, பத்தினிகளுடன் 'ரசானுபவத்தை'ப் பருகி இன்புற்று வாழ்ந்து வந்தனர். ஈசனை மறந்தனரோ, எனின், இல்லை, இடையிடையே யாகம், யோகம், உண்டு. வேள்விப் புகை கானகத்தை மணக்காடாக்கும்— தவசியின் பர்ணசாலைகளைச் சிங்காரக் கூடமாக்கும்! தேவலோக மேனகை தொட்டிட, காமம் துளிர்த்தது ஆஸ்ரமத்திலன்றோ! திலோத்தமையும் ரம்பையும், ஊர்வசியும் மற்றமற்ற விண்ணுலகத்து ஆடலழகிகளும், ஆட்கொல்லிகளும் அடிக்கடி வந்து, கடைகாட்டி, கனகப்பந்தினை ஆட்டி, காவி கமண்டலமேந்திகளை, பம்பரமாக்கி கலகலவெனச் சிரித்து, பொலபொலவெனக் கண்ணீர் உகுத்து, இன்பப் பெருக்கால் ஆஸ்ரமங்களை இந்திராதி தேவர்களும் கண்டு பொறாமைப் படத்தக்கதான புனித ஸ்தலங்களாக்கி உள்ளனர்!

"கோழி கூவிற்று கோகிலமே! ஆறு சென்று அனுஷ்டானாதிகளை முடித்துக்கொண்டு வருகிறேன்! அன்னமே! ஏன் எழுந்திருக்கிறாய்! கமண்டலத்தை நான் தேடி எடுத்துக்கொள்கிறேன், ஆயாசம் நிரம்ப இருக்கிறது ஆருயிரே! நீ சற்று நேரம் அயர்ந்து நித்திரை செய்" என்று கூறிவிட்டு அவர் செல்ல, அவள் கண் அயர்ந்த நிலையில், "அன்னமே!சொர்ணமே! கன்னலே மின்னலே! கட்டித் தங்கமே! எட்டிப்போகாதே என் இன்பமே!" என்று மீண்டும் கொஞ்சு மொழி, கேட்ட பாவை, கேட்டார்க்குக் கேட்டது அருளும் வள்ளல்போல் மனதறிந்து நடந்துகொள்ள, அந்த விருந்து உண்ட நிலையில், அவன் 'ஆஹாஹாரம்' போட, புதுமையாக இருக்கிறதே! இதுநாள் வரை நான் கண்டறியாத பேரின்பமாக வன்றோ இது உளது! என்றெண்ணி அந்தப் பூவை புளகாங்கிதமடைய, கபடமறிந்த கௌதமன், கல்லாக்கிய, அந்தக் கட்டழகி அகலிகை கண்ணாயிரம் உடையான் என்று இன்று பாமரர் கொண்டாடும் இந்திரனைக் கூடிச் சுகித்த இடம் தவசியின் ஆஸ்ரமமன்றோ! அங்கம் தங்கம்! ஆடும் முல்லை! பாடும் கண்கள்! தேடும் இதழ்! என்றெல்லாம் பரவசப்பட்டுக் கூறி, கெண்டை அழகும் கொண்டை அழகும், இடையின் நெளிவும் தொடையின் தரமும், அங்கம் ஒவ்வொன்றிலும் பருவ கருவம் பதிந்துகிடக்கும் பான்மையும் இருத்தலைக் கண்டு துஷ்யந்தன் மனமகிழ்ச்சிகொண்டு, மானும் அன்னமும் மிரண்டோட, மலர் கசங்க கனிசிதற, கன்னியர் வெட்கத்தால் கண் பொத்திக்கொண்டு வேறுதிக்கு நோக்கி ஓடிட, துடியிடையாளைத் தொட்டிழுத்து முத்தமிட்டுப் பட்டத்தரசியாக்குவேன்! கட்டிக்கரும்பே! என் இஷ்டத்தைப் பூர்த்திசெய்! என்று கனிமொழி பேசி, கன்னியின் புதுப் பார்வையால் தூண்டப்பட்ட கட்டுடலின் மீது பட்ட காமன் கணைகள் பொடிபட இன்பம் பெற்று இகத்தில் இதோ பரம் கண்டேன் என்று பூரித்துக்கூறிச் சகுந்தலையை

## நயா பைசா!

ரூபாய்க்கு பதினாறணா என்ற முறையை மாற்றி சதவிகித முறையில் நாணயமாற்றுதலைக் கொண்டு வரப் போகிறார்களல்லவா, டில்லியார்? ரூபாய்க்கு பத்தணா, அணாவுக்கு பத்துபைசா என்று இருக்கவேண்டுமென்று ஐதராபாத்-கிஷின்சந்த் என்பவர் டில்லிபார்லிமெண்டில் சொன்னாராம்! அறிஞர் ராதாகுமுத முகர்ஜி "பைசா எனும் பெயர் வேண்டாம். அதை, பணம் என்ற பெயரால் அழைப்போம்!" என்றாராம்! அக்னிபோஜ் என்பவர், அதுவேண்டாம் 'சதாம்சா என்றுபெயர் சூட்டுவோம் எனக்கூறினாராம்! இவர்கள் சொல்லியதையெல்லாம் கேட்ட உதவிநிதி மந்திரி குகா என்பவர், "கவலைப்படாதீர்கள்! புதிதாகச் செய்யப்படும்நாணயங்களில் ஒரு பக்கம் ,பாரத், என்று தேவநாகிரி எழுத்திலும்; இன்னொரு பக்கம் 'இந்தியா, என்று ஆங்கில எழுத்திலும் குறிக்கச் சொல்லுகிறோம். பைசா என்று சொன்னால் பழைய பைசாவா, புதியபைசாவா எனும் பேச்சுக் கிளம்பக் கூடும், மக்களிடம். ஆதலால் அதற்கு நயாபைசா! (புதிய பைசா) என்றே பெயரிட்டு விடுகிறோம், என்றாராம். வாழ்கதமிழ்!- என்று முழக்குவோருக்குச் சமர்ப்பிக்கிறோம், இச்செய்தியை.

வாரி அணைத்துக்கொண்ட இடம், கண்வரின் ஆஸ்ரமம் அல்லவோ!! அத்திரியும் பிறரும், தவசிகளில் குறிப்பிடத்தக்க எவர் பற்றியும் கூறப்பட்டுள்ள புண்யகாதைகளில் இந்தப் 'புனிதம்' ததும்பிடக் காண்கிறோம். தவசிகள் இருந்த நிலை, பல ஆண்டுக்காலம் பகலென்றும் இரவென்றும் பாராமல், ஊணும் உறக்கமும்கூட மறந்து தொழில் நடத்திப் பெரும் பொருள் ஈட்டி, இனித் தம்மிடம் குவிந்துள்ள செல்வம், சிதையாது குறையாது என்ற நிலை பிறந்ததும், பாரிசு சென்று என்னைப் பார் என் அழகைப்பார் கண்ணாலே! என்று இதழால் கூறிடும் இன்ப வல்லிகளுடன் காமக்களியாட்டத்தில் ஈடுபடும் கனவான் போன்று பெரிதும் இருப்பதைக் காணலாம். ஆரியத் தவசிகள், ஆசாபாசங்களை விட்டொழித்தவர்களாகவோ" காமக்குரோதாதிகளைச் சுட்டெரித்தவர்களாகவோ, பற்று அற்றவர்களாகவோ காட்டப்பட்டு இல்லை! மாபெரும் போர் பல புரிந்த பிறகு மன்னர்கள் பெறக்கூடிய மதுநிகர் இன்பத்தை இந்தத் தவசிகள், மகேசனுக்கு எம்மிடம் மட்டற்ற அக்கரை உண்டு என்று கூறுவதாலேயேபெற்றனர்! அவர்களுக்கு குலச்சண்டை குடும்பச்சண்டை, குமரிகளால் மூண்டிடும் குத்துவெட்டு, யாருக்கு யார் சீடர், என்பது பற்றிக் கிளம்பிடும் சச்சரவு சமர், யாருடைய அந்தஸ்து பெரியது என்பது பற்றிய அமளி, எல்லாம் உண்டு!! காட்டு ராஜாக்கள், என்று கூறி, அது எத்தகையது என்பது பற்றி எண்ணிப்பார்த்துத்தெரிந்துகொள்க என்று கூறிடத் தோன்றுகிறது, தம்பி, அவ்வளவு கோலாகலமாக இருந்து வந்தனர் ஆரியத் தவசிகள்! ஆரியத் தவசிகள், துறவிகளல்ல மிகமிகக் கர்விகள் என்பதைத்தான் அவர் பற்றிய சிலபல கதைகள் காட்டுகின்றன!

இன்று தமிழகத்தில் உள்ள துறவிகள், இளங்கோ காட்டிய வழியில் செல்கின்றாரில்லை, செல்லும் திறனும் இருப்பதாகத் தெரியவில்லை, அவர் தம் நெஞ்சை இன்று ஆட்கொண்டிருப்பது, அன்றைய ஆரிய தவசிகள் முறைதானோ என்று எண்ணத்தக்க வகையில் காரியம் பல நடைபெற்று, மூடி மறைக்கப்பட்டதுபோக, புடைத்து வெடித்து வெளியே சில தெரிந்திடக் காண்கிறோம். துறவிகள் தவசிகளாகிவிட்டனர்.

தம்பி, துறவிகளின் நிலைபற்றிய எண்ணம் குடைந்த நிலையிலிருந்த எனக்கு, ஒரு துறவிபற்றிய சிறு ஏடு படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

ஜெரோம்–கெ–ஜெரோம் — என்பவர், ஆங்கில உரைநடையாசிரியரில் கீர்த்தி பெற்றவர். நகைச்சுவை ஏடுகள் தீட்டுவதில் சமர்த்தர். அவர் தம் ஏடுகள், பல்வேறு மொழிகளிலே வெளியிடப்பட்டன. அவருடைய புத்தகமொன்று படித்தேன், குற்றாலத்தில்.

கதைதான்! மிகமிகச் சாதாரணமான கதை! அதிலே சரசம் சாகசம், சதி துப்பறிதல், கொலை வஞ்சம் தீர்த்தல், இயற்கை வருணனை வழக்கு மன்ற வாதம், இவைகள் ஏதும் கிடையாது. ஒரு சாமான்யனுடைய மிகச் சாதாரணமான கதை. கொல்லன்மகன் ஒருவன், உழைப்பாலும் திறமையாலும் ஏழ்மையை விரட்டி அடித்து, செல்வவானான, வாழ்க்கை வரலாறு. காதல், நெஞ்சை அள்ளத்தக்க வகையில் இல்லை! நள்ளிரவு சந்திப்புகள், நயவஞ்சகனின் எதிர்ப்பு, ஏந்திழையாள் உகுத்த கண்ணீர் இவன் இதயத்தைத் துளைத்திடுவது. இதெல்லாம் இல்லை. சாதாரண கதை. சரி, கேளேன், கதையைத்தான்.

அந்தனிஜான் என்பது நூலின் பெயர்; கதாநாயகன் பெயரும் அதுதான்.

அந்தனி, ஒரு கொல்லன் மகன்! தந்தை கடுமையாக உழைக்கிறார், போதுமான வாழ்க்கை வசதி கிடைக்கவில்லை. தாயார் பாடுபடுகிறார், குடும்பம், தட்டித்தடுமாறி நடந்துகொண்டிருக்கிறது. சிறுவனாக இருப்பது முதலே, அந்தனி, சுறுசுறுப்பும் அறிவுத் திறனும் மிகுந்தவனாக இருக்கிறான். எதையும் துருவித்துருவி ஆராய்கிறான், ஏன்? ஏன்? என்ற கேள்விதான் அவனுக்கு அரிச்சுவடியாக அமைகிறது.

முறைப்படி அந்தனியைப் படிக்க வைக்கிறார்கள்; கல்வியில் அவன் கருத்தூன்றிப் பலன் காண்கிறான்.

அவன் மாமன், ஒரு முரடன்! ஊரார் அவனை நாத்திகனென்கிறார்கள். அவனிடம் அந்தனி, அன்புகொள்கிறான்,

## அறிவிப்பு

என் பெயரில் "அருள் நெறி" என்ற புத்தகத்தை, மதுரை 'அறிவுப் பண்ணை' என்ற பதிப்பகத்தார் வெளியிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பெயரில் அப்படிப்பட்ட புத்தகத்தைவெளியிட நான் யாருக்கும் அனுமதியோ உரிமையோ அளிக்கவில்லை. என்னுடை கருத்துக்கள் என்று அப்புத்தகத்தில் தப்புந் தவறுமாகவும், தாறுமாறாகவும், இல்லாதும் பொல்லாதுமாகவும், மாற்றியும், திருத்தியும், என் சொற்பொழிவுகளை வெளியிட்டிருக்கிறார்கள்.

பொய்யையும், திருட்டையும் வாழ்க்கைக்கான வசதியாக வைத்துக்கொண்டு இழி தொழில் நடத்தும் தமிழகத்தின் அவமானச் சின்னங்களாக இருக்கும் அவர்கள், என் பெயரில் என்னைக்கேட்காமல் புத்தகம் வெளியிட்டிருக்கிறார்கள். அவர்கள்மீது வழக்கு தொடுப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. நேர்மையான விற்பனையாளர்களும், பொதுமக்களும் அவர்தம் இழிசெயலுக்கு ஆதரவு தரவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அன்பன்,
இரா. நெடுஞ்செழியன்.

அந்தச் சிற்றூரில் ஒரு சீமான் குடும்பம்!

சீமான், வழக்கறிஞர், வணிகர், இதனாலேயே சீமானானவர்; நல்லவர்; பிறருக்கு உதவிபுரியும் நன்னெஞ்சினர்.

அவருக்கு ஒரு மகன், ஒரு மகள். மகள் பெயர், பெட்டி.

அந்தக் குடும்பத்தின் உதவி கிடைக்கிறது, அந்தனிக்கு. பெட்டி அந்தனியிடம் பாசம் கொள்கிறாள். அது காதலாக மலரும் என்று பலரும் கருதுகிறார்கள்!

தொழிலில் தேர்ச்சி பெற்று, அந்தனி, தன்குடும்ப நிலையை உயர்த்துகிறான்.

ஊழியனாகச் சேர்ந்தவன் நாளாவட்டத்தில், சீமானுடைய தொழிலில் பங்காளனாகிறான்; பணம் குவிகிறது; படாடோபம் தலைதூக்கவில்லை; பண்பு கெடாத வகையில் வாழ்க்கை நடத்துகிறான்.

எல்லோரும் அந்தனி, சீமானின் மருகனாவான் என்று எதிர்பார்க்கிறார்கள், பெட்டியும் மறுத்திருக்க மாட்டாள், எனினும் அந்தனியின் மனம் வேறோர் மங்கையை நாடு

கிறது, பெட்டி கண்ணீர் பொழியவுமில்லை, "காதகா! பாதகா! கனவு கண்டதெல்லாம் பொய்த்துப்போய் விட்டதே! இனி ஏன் எதிரே நிற்காதே! என் மாளிகையில் உனக்கு இடம் கிடையாது, நட, நட!" என்று கனல்கக்கவில்லை. எலினர் மணமகளாகிறாள்.

குடும்பம் குதூகலமாக நடந்து வருகிறது — குழந்தைகள் பிறக்கின்றன.

சீமானும் அவன் மகனும் இறந்துபடுகிறார்கள்.

அந்தனி, ஏழைகளுக்கு இதம் தரும் பணிகள் பல செய்கிறான்.

புகழ் பெறுகிறான் — எனினும் அவன் மனதில் சாந்தி இல்லை.

கடவுள்பற்றி அவன் சிறு வயது முதல் சிக்கல் நிரம்பிய சிந்தனையில் ஈடுபடுகிறான்.

முடிவில், கடவுட் தன்மை பற்றி இதுவரை கூறப்பட்டுவந்த கொள்கைகள் பொருளற்றவை என்று உணருகிறான்.

ஏழைகளுக்கு உதவுவதற்காகப் பொருள் ஈட்டுவது முறைதான் என்று எண்ணிக்கொண்டிருந்தவன், அதுவும் தவறு என்று உணருகிறான்.

உண்மையான தொண்டு, தன்னலமற்றதாக இருத்தல்வேண்டும் என்று உணருகிறான்.

மிகுந்த செல்வநிலையில் இருந்தவன், அனைத்தையும் துறந்துவிடத் தீர்மானிக்கிறான்.

மீண்டும் ஏழைகளிடையே சென்று எளிய வாழ்க்கை நடத்திக்கொண்டு அவர்களுக்கான பணியாற்ற முனைகிறான்.

பெட்டி, அவனுடைய போக்கை ஆதரிக்கிறாள்.

சுகபோகமும், செல்வநிலையும் இழந்தாலும் பரவாயில்லை, அந்தனிக்குத் துணைநிற்பதுதான் அறிவுடைமை அன்புடைமை என்று எலினரும் முடிவுசெய்கிறாள்.

அந்தனி, துறவியாகிறான்! மனைவி, குழந்தைகள், உண்டு! தொழில்நடத்துகிறான், தன்வாழ்க்கைக்கான வசதிபெற! தொண்டு புரிகிறான்! அவனுடைய துறவு, ஏழைகளுக்கு ஓர் நல்வாய்ப்பாகிறது.

தம்பி! இதுதான் கதை! ஒரு கவர்ச்சியும் தெரியவில்லை அல்லவா!! இச்சொலியும் விம்மலும், முழக்கமும் முணுமுணுத்தலும், கூடிப்பிரிதலும் கொண்டாட்டமும், ஏதுமில்லை, எனினும், இந்தக்கதையின் மூலம். ஜெரோம்-கெ-ஜெரோம், அளிக்கும் கருத்து, உண்மையிலேயே, படிப்போரை, புதியதோர் உலகுகொண்டு சேர்க்கிறது.

உண்மைத்துறவு, என்ன என்பதை உணரமுடிகிறது!

இக்காலத்துறவிகளைக் கண்டு, என்னே! காலத்தின் கோலம்! என்று ஏங்கும் மனத்தினருக்கு, அந்தனி கதை, உண்மைத்துறவு நிலை எங்ஙனம் மேம்பாடுடையதாக இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

குப்பைமேட்டில் பிறந்த அந்தனி, கோலாகலமான வாழ்க்கை நடத்துவதற்கான வசதியைப்பெறுகிறான்.

கொல்லன் பட்டரையில் பிறந்தான், கோட்டை போன்றமாளிகையைப் பெறமுடிந்தது.

நாற்றமடிக்கும் சேரியில் பிறந்தான், உல்லாச உலகிலே இடம் பெற்றான்; ஏழையர் விடுதியில் நாற்றம் குறையவும், சிறிதளவேனும் அவர்களுக்கு ஏற்றம் கிடைக்கவும், அவன்வழிகண்டான்.

எனினும், இறுதியில், அவன் தன்னலமறுப்பு ஒன்றின் மூலமாகத்தான் ஏழையர் உலகுக்கு உய்வுதேட முடியும் என்று உணருகிறான்—துறவியாகிறான்!

அவன் விரும்பி இருந்தால், சீமானாகவும் தர்மவானாகவும், மதத்தலைவனாகவும், ஊராள்வோனாகவும் வாழ்ந்து கொண்டிருக்க முடியும்.

உழைப்பால் உயர்ந்தோன்— என்று ஊரார் அவனைப்பாராட்டினர்.

ஏழையாகப் பிறந்தாலென்ன அறிவு இருந்தால், அந்தனிபோல அந்தஸ்தான நிலை பெறமுடியும் என்று அனைவரும் கூறினர்.

அவன் ஒரு எடுத்துக்காட்டாக, விளங்கினான்.

எனினும், உடைமைகளை உதறிவிட்டு, உயர்ந்த இடத்தைவிட்டு விலகி, எளிய வாழ்க்கையையும் ஏழையர் உலகிலே ஒரு இடத்தையும் மீண்டும்கொள்கிறான்—துறவியாகிறான்.

துறவின் மூலம், அவன் வானுலகில் இடம் கேட்டானில்லை—வணங்கத்தக்க தெய்வத்தினிடம் வரம் கேட்க அல்ல, அவன் துறவியானது. துடிக்கும் ஏழையருக்குத் தொண்டாற்றத் துறவியாகிறான்.

அந்தத் துறவியுடன், நாம் காணும் ஆதீனத்துறவிகள், அஷ்டஐஸ்வரியத்தைப் பெற்று ஆனந்த வாழ்வு நடாத்தும் துறவிகள், ஆகியோரை ஒப்பிடும்போது, நெஞ்சு நெகிழத்தான் செய்கிறது.

அந்தனிஜான் கதையில் சிறுசிறு சம்பவங்கள் மூலம், ஆசிரியர், அரிய கருத்துக்களை அள்ளித்தருகிறார்.

இந்தச்சம்பவங்களின் மூலம், படிப்படியாக, அருள்நெறி எவ்வகையில் இருக்கும் என்பதையும், கடவுட் கொள்கைபற்றியகருத்துக்களில் எவ்வளவு பொய்மையும் பொருளற்றவையும் உள்ளன என்பதையும் ஆசிரியர் அழகுற எடுத்து விளக்குகிறார்.

அந்தனி சிறுவனாக இருந்தபோது ஒரு சம்பவம்—கவனி தம்பி! கருத்துக்கு விருந்து!

## ஒரு வாரம்!

ஒருவாரத்துக்குசபைக்குவராதே! என்று, எச்.வி. காமத்தை டில்லிபார்லிமெண்டில், உத்தரவிட்டிருக்கிறார் துணைத்தலைவராக இருக்கும் அனந்தசயனம், 26-ந்தேதி. அது, சரியே, என்று அகிலஉலகப் பண்டிதரும் தெரிவித்திருக்கிறார். காமத் என்றால், முன்பு பார்லிமெண்டில் தீப்பொறி என்பர்! சர்க்காரின் ஊழல்களை அம்பலப்படுத்துவதில், ஆற்றல் மிக்கவர். அதனால் அவரை பார்லிமெண்டுக்குள் நுழையாமல் செய்ய, நேருகட்சியினர்— முயன்று வெற்றிபெற்றனர், தேர்தலின்போது. பிறகு ஒரு உபதேர்தலில், அவர் வெற்றிபெற்று வந்தார்! அவரை ஒருவாரகாலம் வரக்கூடாது என்று சொன்னதற்கு சபைத்தலைவரை 'நான்சென்ஸ், என்று சொன்னது காரணம் என்கின்றனர். ஆனால், அவர், தன்னை உட்காரச் சொல்லியும் ஏளனம் செய்தும் கூவிய காங்கிரஸ் எம்.பிக்களையே அப்படிக் குறிப்பிட்டாராம். எப்படியோ, ஒருவார காலத்துக்கு அவரைவெளியே அனுப்பி "உலகின் கண்களில் 'கேலிக்குறியை உண்டுபண்ணிவிட்டார்கள்! ஒரு வாரகாலம் நிம்மதியாக இருக்கலாமென்று நேருவும் ஏனையமந்திரிகளும் பெருமூச்சு விட்டிருக்கக்கூடும்! ஆனால், ஆச்சாரியா கிருபளானி ஒரு தீர்மானம் கொண்டு வந்து சபையின் ஆதரவுடன் 'ஒரு வாரம்' என்பதை ரத்து செய்யும்படி செய்திருக்கிறார்!!

ஒருமாலை, ஆறேழு பேர் கூடி, பஜனை செய்துகொண்டிருந்தனர்.

கடவுள், பரமண்டலத்தில் இருக்கிறார். அவருடைய சன்னிதானத்தின் முன்பு அனைவரும் தொழுது நிற்கவேண்டும். ஆண்டவனிடம் 'பயபக்தி விசுவாசம் இருக்கவேண்டும்—என்று ஒருமாது கூறினார்கள்.

சிறுவன் அந்தனிக்கு, தொழிலகக் கதவைத்திறந்து வைத்து விட்ட நினைவு வந்தது; ஓடிச் சென்று கதவை மூடிக்கொண்டு உள்ளேவந்தான்.

அருள் பாலிக்கும் ஆண்டவனை
அனைவரும் போற்றுதும் வாரீரோ!

என்று பஜித்தனர்.

அந்தனியின் தாயார், அடிக்கடி வெளியே சென்று, பலபண்டங்களை பெற்றுக்கொண்டு வருவதுண்டு. எங்கே, யார் தருகிறார்கள், என்பது சிறுவனுக்குத்தெரியாது. ஆனால் நல்லதைத்தருபவர் ஆண்டவன் என்று பஜனை நடத்தியோர் கூறிடக்கேட்டதால், தன் தாயாருக்கு இந்தப் பொருளைத்தருபவரும், ஆண்டவனாகத்தான் இருக்க வேண்டும் என்று அந்தப்பிஞ்சு உள்ளம் எண்ணிற்று.

அவனுக்கு எப்படியும் ஆண்டவனைப் பார்த்துவிட வேண்டுமென்று ஒரே ஆவல்.

அனைவருக்கும் அருள்பாலிக்கும் ஐயன் என்றல்லவா அனைவரும் பஜிக்கின்றனர்; அத்தகையவரைக் காணவேண்டும் என்று ஒரே துடிப்பு.

ஆண்டவனல்லவா, நம் தாயாருக்குப் பண்டம் அளிக்கிறார்; அவரை தரிசிக்கவேண்டும் — என்று எண்ணிக்கொண்டான்.

"அம்மா! இன்று என்னையும் அழைத்துக்கொண்டுபோ" என்று கெஞ்சினான்; தாயும், அந்தனியை உடன் அழைத்துச் சென்றனர்.

நீண்டதூரம் சென்ற பிறகு ஒரு மாளிகையை அடைந்தனர்; அங்கு ஒரு முதியவர் இருந்தார்; தாய் அவருக்கு வண்க்கம் கூறினாள். முதியவர் சிறுவனுடைய முதுகில் தட்டிக்கொடுத்து, பணம்கூடக் கொடுத்தார்.

தாயார் உட்பக்கம் சென்று விடவே சிறுவன் கூடத்தில் இருந்தான். வேறு மாதர் சிலர் அவனுக்குப் பாலும் பலகாரமும் கொடுத்தனர். சிறிது நேரம் கழித்துத்தாயார், ஒருசிறு மூட்டையுடன் வந்து, சிறுவனை அழைத்துக்கொண்டு வீடு நோக்கிப் புறப்பட்டாள்.

சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுச் சிறுவன், "அவர் அப்படி ஒன்றும் பிரமாதமான தேஜசுடன் இல்லையே அம்மா!" என்றான், "யார்?" என்று தாயார் கேட்டாள்; "ஆண்டவன்" என்று சிறுவன் கூறினான். தூக்கி வாரிப் போட்டது தாயாருக்கு. என்னடா சொல்லுகிறாய்? ஆண்டவன் கிண்டவன் என்று என்னமோ சொல்லுகிறாயே, என்ன அது? என்று அவள் கேட்க, சிறுவன், மாளிகையைச் சுட்டிக்காட்டி "அவர்தானம்மா, ஆண்டவன்! அவர்தானே நமக்கு நல்ல பொருளெல்லாம் தருகிறார்! ஆண்டவன் தான் அனைவருக்கும் நல்லது தருகிறார் என்று பேசிக்கொண்டிருந்திர்களே நீங்களெல்லாம், நான் கேட்டுக்கொண்டுதானே இருந்தேன்" என்று அந்தனி விளக்கமளித்தான், அவன் தாய்க்கு நீண்ட நேரம் வரையில் என்ன பேசுவதென்றே தெரியவில்லை.

"அவர் ஆண்டவன் அல்ல; சர்வில்லியம்கூப்பர்! அவரிடம்நான் ஊழியம் செய்திருக்கிறேன்" என்று நீண்ட நேரத்துக்குப் பிறகு கூறினாள்,

"ஒருவிதத்தில் நமக்கு இந்தப் பொருளை ஆண்டவன் தான் கொடுக்கிறார் என்று கூற வேண்டும். சர். வில்லியம் மனதிலே ஆண்டவன்தானே, கருணை பிறக்கச் செய்கிறார்; அதனால்தானே நமக்கு சர். வில்லியம் இந்த உதவி செய்கிறார்; எனவே நமக்கு ஆண்டவன்தான் இந்தப் பொருளை எல்லாம் தருகிறார் என்று சொல்ல வேண்டியதுதான்!"—என்று மேலும் விளக்கமுரைத்தாள் அன்னை.

சிறுவன் ஒரு கணம் யோசித்துவிட்டு, "ஆனால், அம்மா! இந்தப் பொருள், சர். வில்லியமுடையது தானே" என்று கேட்டான்.

"ஆமாம்! ஆனால் ஆண்டவன் தான் அவருக்கு அவைகளைக் கொடுத்தார்" என்று தாயார் கூறினாள்.

கடவுள் இப்படிச் சுற்றிவளைத்து நடந்துகொள்வது சரியான வழியாக அந்தோனிக்குப் படவில்லை.

"ஏனம்மா, கடவுள் நமக்கு இந்தப் பொருள்களைத் தரமாட்டேனென்கிறார்! நம்மிடம் அவருக்கு ஆசை இல்லையா?" என்று சிறுவன் கேட்டான்.

என்ன பதில் கூறமுடியும்! பாபம்! அந்த மாது சரி, சரி, இப்படி எல்லாம் கேட்கக்கூடாது; தெரிகிறதா; என்று கூறித்தான் சிறுவனை அடக்க முடிந்தது! ஆனால் மனம்? சிந்தனை?

இன்னும் சர்வசாதாரணமாக 'மேதைகள்' கூறிடும் வகையிலே தான், அந்தனியின் தாயார் பேசுகிறார்கள்!

கொடுக்கும் ஆள் யாராக இருந்தாலும், கொடுக்கும் கரம் ஆண்டவனுடையது என்பதுதான், எங்கும் எவரும் பேசும் தத்துவம்! அந்தத் தத்துவத்தைக் கூறிவிட்டு, அந்த மேதைகள் தமது அறிவுத்திறனைக் கண்டு தமக்குத் தாமே பாராட்டிக்கொள்கிறார்கள்!

## அது ஒரு, கல்!

"ஏடா! மூடா! என்னைப் பார்த்தாயா? எவ்வளவு உயரத்திலிருக்கிறேன்! அருமையான சோபா—வெல்வெட்டு உறை—மேலே, நான்! இந்த இடம் உங்களுக்குக் கிடைக்குமோ?" என்று எக்களித்ததாம், ஒரு கல்.

மிகப் பெரிய மாளிகை! யாருக்குமே ஆசை வரத்தான் செய்யும், உள்ளே நுழைய!! அதுவோ, கல். கேட்கவேண்டுமா? கொஞ்சம் பெருமையோடு ஏறிட்டுப் பார்த்ததாம், வீதியில் புழுதியே கதியெனக் கிடக்கும் சரளைக் கற்களைப் பார்த்து. ஏளனத்தோடு, எடுத்தெறிந்ததாம் வார்த்தைகளை! அதுவும், கீழே கிடந்த கல்தான். வீதி வழியே சென்ற வீம்புக்காரச் சிறுவனொருவனுக்கு மாளிகை மாடியின் கண்ணாடி சன்னல் தென்பட்டது—அதை உடைக்க வேண்டுமென்றோர் ஆசை பிறந்தது, குறும்புக்காரனாயிற்றே! குனிந்து எடுத்தான், அக்கல்லை — வீசினான் — கீழே கிடந்த கல், கண்ணாடியைத் தூளாக்கிக் கொண்டு, உள்ளே போய் விழுந்தது!!

அது, கேலி பேசுவது கண்டு, கீழே கிடந்த கற்கள் பதில் பேசவில்லை—'காலம் வரும்!' என்று, வாய்மூடிகிடந்தன.

அந்த 'காலம்' வெகு சீக்கிரமே வந்துவிட்டது! அறைக்குள் நுழைந்த வீட்டுக்காரன் கண்ணில், சன்னல் தூளாகியிருப்பது தெரிந்தது! அதற்குக் காரணமான கல் பட்டு மெத்தையின் மீது கிடப்பதும் தெரிந்தது!! பையன் சிக்கியிருந்தால், அவன் மீது பாய்ந்திருப்பான், அவன் கண்ணிலோ, கல்தான் தென்பட்டது. கோபம் அத்தனையையும் அதன் மீது காட்டி, மெத்தையினின்றும் அதை எடுத்து, ஓங்கி எறிந்தான், கீழே! வீசிய வேகத்தில் தூளியாகி, வந்து வீழ்ந்தது. தரையில்!! கேலிக்கு ஆளான கற்கள், சிரித்தன, அதற்கு ஏற்பட்ட 'கதியை'ப் பார்த்து.

*

கதைதான், இது! ஆனால், ரஷ்ய நூலாசிரியன், அந்தக் கல்லை யாருக்கு ஒப்பிடுகிறான், தெரியுமா? சமுதாயத்தில், தான் மட்டும் உயர்ந்த நிலைக்கு போனால் போதும். தன் இனம் எப்படியானாலும் பரவாயில்லை; என்று சிலபேர் 'அந்தஸ்து' வேட்டையாடுகிறார்களே, அரசியலிலும் ஏனைய துறைகளிலும், அவர்களுக்கு ஒப்பிடுகிறான்!!

சிறுவனல்லவா, கேட்கிறான்—ஏனம்மா! ஆண்டவன், இப்படி சுற்றிவளைத்து வேலைசெய்கிறார். நமக்கு உதவிசெய்ய விரும்பினால், ஏன் நேரடியாகச் செய்யக்கூடாது!—என்றல்லவா கேட்கிறான்.

அவன் வாயை, அன்னை அடக்கிவிடுகிறார்கள்! அந்த அன்னை மட்டுமா—இன்று மேதைகளும் சிக்கலான, சங்கடமான, அடிப்படையை ஆராயும் விதமான கேள்விகளைக் கேட்பவர்களின் வாயை அடக்கத்தான் முனைகிறார்கள்.

வாய் மூடிக்கொண்டான், அந்தனி! ஆனால் மனம்? சிந்தனை? சும்மாவா இருக்கும்! அடக்க அடக்க, வேகமாக வேலைசெய்கிறது.

*

நியூட் மாமாவை, நாஸ்திகன் என்று பலரும் கூறினர், அந்தப் பாளையத்துக்குப் பணியாற்றவந்த பாதிரிமார்கள் ஒவ்வொருவரும், இந்த நாத்திகனைத் திருத்தி வெற்றி காணவேண்டுமென்று வெகு பாடுபட்டனர். ஆனால் நியூட் மாமாவோ, பிடிவாதமாக இருந்து வந்தார்!

நரகத்தில் சிக்கி அவன் நாசமாகப்போவது திண்ணம் என்று பலர் பேசுவர்; நரகம் என்றால் கொடியவர்களைத் தண்டிக்கும் இடம் என்று அந்தனி கேள்விப்பட்டிருக்கிறான்! நியூட்மாமாவைப் பார்த்தாலோ, கொடியவராகவே தெரியவில்லை! எனினும் அவர் நரகத்தில் தள்ளப்படப்போவது நிச்சயம் என்று மாமியே கூறுகிறார்கள்!

"மாமி! மாமா, மிகவும் கொடியவரா?"

"கொடியவரல்லடா! எவ்வளவோ கொடியவர்களை நான் பார்க்கிறேன், உன்மாமா அப்படிப்பட்டவரல்ல"

"அப்படியானால், அவர் ஏன் நரகம் செல்லவேண்டும்?"

"போகத் தேவையே இல்லையே! அவராக அல்லவா, பிடிவாதம் பிடிக்கிறார்! நம்பிக்கை கொண்டாரானால், காப்பாற்றப்படுவார்! நரகம் போகத்தேவையே இல்லையே"

"நம்பிக்கையா? எதை நம்பச் சொல்கிறீர்கள்?"

"விவரமாகச் சொல்ல எனக்கு நேரமில்லை. சொல்வதை நம்பினால் போதும்; உன்மாமா அதைத்தான் செய்யமாட்டேனென்கிறார்"

"யார் சொல்வதை நம்பவேண்டும் என்கிறீர்கள்?"

"எல்லோரும் சொல்வதைத்தான், நானே எத்தனையோ முறை சொல்லி இருக்கிறேன்—கேட்டால் தானே, ஏதேது நீயும் உன் மாமனைப்போலவே கேள்விகளாக அடுக்கிக்கொண்டே போகிறாயே, இப்படி எல்லாம் பல கேள்விகள் கேட்கக் கூடாது—தெரிகிறதா!"

சிறுவனுடைய வாயை மாமி அடக்கிவிட்டாள். ஆனால் மனம்? சிந்தனை? தூங்கிவிடுமா என்ன? அது கொதித்துக்கொண்டேதான் இருந்தது.

அன்னையும், மாமியும் சிறுவனுடைய சந்தேகத்தைத் துடைக்கவில்லை. விருப்பம் இல்லாததால் அல்ல, அவர்களால் இயலவில்லை! இப்போது மட்டுமென்ன? எந்த மேதை, விளக்கம் அளிக்கிறார்—சந்தேகத்தை நீக்குகிறார், சீறுகிறார், சபிக்கிறார், போக்கிரித்தனமான பேச்சு இது, நாத்திகப் போக்கு, என்று நிந்திக்கிறார்.

*

மாமா! நீ, ஏன் நம்பிக்கைகொள்ளக் கூடாது?"

"எதை நம்புவது?"

"எல்லோரும் நம்புவதைத்தான்"

"அவர்களை நம்பாதே அந்தனி, நம்பாதே, அவர்கள் நம்பிக்கையுடன் இருப்பதாகச் சொல்கிறார்களே தவிர, உண்மையில், அவர்கள் யாருக்கும், நம்பிக்கை கிடையாது. சும்மா, அப்படிச்சொல்லி வைக்கிறார்கள், ஏதோ அந்த நம்பிக்கை மூலம் பலன் கிடைக்குமென்று எண்ணி அவ்விதம் சொல்கிறார்கள்"

சிறுவனுடைய சிந்தனையையும் கிளறிவிட்டான்; அருகே இருந்த நெருப்பையும் கிளறிவிட்டபடி, மாமன் மேலும் பேசலானான்.

"அவர்கள் எதெதில் நம்பிக்கை இருப்பதாகச் சொல்கிறார்களோ, அவற்றிலே அவர்களுக்கு உண்மையான நம்பிக்கை இருந்தால், இந்த உலகமே உத்தமபுரியாகி இருக்குமே! அதைத்தான் நான் அவர்களிடம் பல முறை கேட்கிறேன். பதில் கூறினதில்லையே அவர்கள், கூறமுடியாதே."

மாமன், பேச்சை நிறுத்தவில்லை.

"போகப்போக நீ அவர்களுடைய போதனைகளை எல்லாம் தெரிந்து கொள்வாய்.

**உன்னைப்போல் பிறரையும் நேசி!**

**அனைத்தையும் ஏழை எளியோருக்குக்கொடு**

அவர்களுக்கு ஆண்டவன் கூறுவது இது. அவர்கள் அதுபோல நடந்துகொள்வதை நீ கண்டது உண்டா? அவர்கள் நம்பிக்கை கொள்வதைக்காண்கிறபோது நானும் நம்பிக்கை கொள்வேன்."

*

பஞ்சம், வேலை நிறுத்தத் தொல்லை, குளிர்கொட்டுகிறது வறுமை போட்டியிடுகிறது. நிலக்கரிச் சுரங்கத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த வேலைநிறுத்தம் முடிவடைந்தது. அப்பாடா, என்று ஆறுதல் கூறுவதற்குள் எஃகுத் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் கிளம்பிவிட்டது, மொத்தத்தில் ஏழைகளுக்குக் கடுமையான சோதனைக் காலமாக இருந்தது. அந்தனிக்கு, கடவுள் ஏன் இதை அனுமதிக்கிறார் என்று ஆச்சரியம். மாமியிடம் பேசுகிறான்.

"கடவுள் ஏன் இதனைத் தடுத்து நிறுத்தக்கூடாது!"

"எதை நிறுத்துவது?"

"வேலைநிறுத்தத்தைத்தான் மாமி! ஏன் கடவுள் அனைத்தையும் சரியாக வைத்திருக்கக்கூடாது, அவரால் முடியாதா"

## அவரும் இவரும்

சத்தியாக்கிரகம் என்ற பெயரால் மக்கள் போரிடுவார்கள் அதைப் பார்த்துக்கொண்டு 'உறுதியோடும் அமைதியோடும், இந்தியசர்க்கார் இருக்குமாம்!!—என்று குறிப்பிட்டு பங்களூர் ஏடான 'டெக்கான் ஹெரால்டு, தீட்டியுள்ள தலையங்கத்தில், ஆசிரியர் போத்தன் ஜோசப், ரசமானதகவல் ஒன்றைத் தெரிவிக்கிறார். செஞ்சீனாவின் ஒரு மூலையில் மாகோ என்றொரு சிறு இடம், போர்ச்சுகீசிய ஆதிக்கத்தில் இன்னும் இருக்கிறதாம். சீனாவுக்குப் போயிருந்த நேரு, சூயன்லாயை அதைப்பற்றிக் கேட்டபோது, எந்த நிமிடத்தில் வேண்டுமானாலும் என் கைக்கு அதைக்கொண்டு வந்துவிடுவேன். அது, என்ன சுண்டைக்காய்! ஆனால் இப்போது, என் நாட்டின் பெரிய பிரச்னைகளைச் சமாளித்து, நாட்டை வளமாக்குவதே என் வேலை என்றாராம்.

"ஏன் முடியாது, நிச்சயமாக முடியும். அவர் மனதுவைத்தால் ஆகாத காரியம் உண்டா"

"ஏன் அவர் மனது வைக்கவில்லை, மாமி! அனைவரும் ஆனந்தமாக இருக்கவேண்டும் என்று அவர் விரும்பவில்லையா!,,

"அனைவரும் ஆனந்தமாக வாழவேண்டும் என்பதுதானடா, அவருடைய விருப்பம். ஆனால் மக்கள் கெட்டவர்களாக இருக்கிறார்கள்; பிறக்கும்போதே கொடியவர்களாகிறார்கள்!

"ஏன், நாமெல்லாம் பிறக்கும் போதே கொடியவர்களாகப் பிறக்கிறோம். ஆண்டவன்தானே நம்மை எல்லாம் படைக்கிறார்!,,

"அனைவரையும் அவர்தான் படைத்தார், அதிலென்ன சந்தேகம். எல்லாம் அவர்சிருஷ்டி!

"ஏன், அவர் நம்மை நல்லவர்களாகப் படைக்கவில்லை?,,

"அவர், நல்லவராகத்தான் அனைவரையும் படைத்தார். ஆதாமும் ஏவாளும், அவர் படைத்தபோது பரிசுத்தப் பிறவிகள்! ஆனால் அவர்கள் ஆண்டவனுடைய கட்டளையை மீறி; (பாபப்) பழத்தைத் தின்று தொலைத்தனர். இல்லையானால் நாமெல்லாம் நல்லவர்களாகவும் பிறந்திருப்போம், ஆனந்தமாகவும் வாழ்ந்து கொண்டிருப்போம்.,

"ஆதாம் என்பவன்தான் முதல் மனிதன்! அப்படித்தானே மாமி!,

"ஆமாம்! ஆண்டவன் ஆதாமைப் படைத்தார், நல்லவனாகத்தான்.,,

"எவ்வளவு காலத்துக்கு முன்பு நடந்தது மாமி, இந்தச்சிருஷ்டி.

"ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு!,,

"மாமி! தவறு செய்துவிட்டேன், மன்னித்து அருளுக! என்று ஏன் ஆதாம் கூறி, ஆண்டவனுடைய மன்னிப்பைப் பெறவில்லை?,,


அறிவேடு! ஆங்கில ஏடு!!

ஆசிரியர்: பி. பாலசுப்ரமணியம்,

'சண்டே அப்சர்வர்'

விலை அணா 2

ஜெனரல்பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2.


,,விபரீதம் நேரிட்டுவிட்டதே, ஆதாம் என்ன செய்யமுடியும்? பழத்தைத் தின்றுன பிறகு, பகவானிடம் முறையிட்டு என்னபலன்!,,

"சாத்தான், ஆதாமையோ ஏவாளையோ,கெட்டநினைப்புக்கொள்ளும்படி தூண்டினானே, ஏன் கடவுள் அதைத் தடுக்கவில்லை? கடவுள் சர்வசக்தி உள்ளவர்தானே! சாத்தானை ஏன் அழித்திருக்கக் கூடாது!,,

மாமி, மருண்டுபோனாள்! போக்கிரிப்பயல், என்னென்ன கேள்விகளைக் கேட்கிறான்! என்று கோபங் கூட வருகிறது.

"சரி, பள்ளிக் கூடத்துக்கு நேரமாகிறது, போ, போ" என்று கூறி, அவனை அனுப்பிவிடுகிறாள். அந்தனியும் வாயை மூடிக் கொண்டு செல்கிறான்! வாய் மூடிக் கிடக்கிறது! ஆனால், மனம்? சிந்தனை?

மாமிமருண்டுபோகிறாள்— மேதைகள் இன்று மிரட்சியுற்று 'ஈதேது பயங்கரமான புரட்சி தலைவிரித்தாடுகிறதே!" என்று பேசுகிறார்களே, அதுபோல.

ஆனால் அந்தனியின் உள்ளத்திலே ஊறிய எண்ணங்கள், மாமியும் பிறரும் அடக்க அடக்க, வேகமாக வளர்ந்தது—மடியவில்லை.

அந்தனி உழைப்பால் உயர்ந்து, ஊராரின் நன்மதிப்பைப் பெற்றான்—ஆனால் சுயநலம் அவனை அடிமைப்படுத்திவிடவில்லை—சுகபோகத்தில் அவன் மூழ்கிவிடவில்லை. பக்தர்களின் பேச்சிலே சகல அறிவும் இருப்பதாகக் கருதும் போக்கினனாக, அந்தனி இருந்திருந்தால், செய்த புண்யத்தின் பலனாக ஆண்டவன் தனக்கு இந்த நல்ல நிலையை அருளினார், எனவே அவருக்கு மேலும் சேவைசெய்ய வேண்டும் என்று கருதி, ஆலயத் திருப்பணியில் மும்முரமாக ஈடுபட்டு, பெரிய பக்திமான் என்று விருதுபெற்றிருக்கக்கூடும்! ஆனால் அவனோ ஒரு சந்தேகி! சிறுபருவமுதலே. எனவே அவனுக்கு மனதிலே சிக்கல் குறையவில்லை! எல்லாம் அவன்விட்டவழிப்படி நடக்கும் என்று எண்ணி, சோம்பித் திரியவில்லை.

*

துணைவி நோய்வாய்ப்பட்டதால் அந்தனி துயர்க்கடலிலாழ்ந்தான். ஆண்டவன்மீது பாரத்தைப் போட்டுவிட்டால் அவர் ஆபத்தைப் போக்குவார், எதையும் சாதிக்கவல்லவரல்லவா சர்வேஸ்வரன், என்று எண்ணிடுபவனல்லவே! எனவே, அந்தனி 'பூஜை' கள், செய்து, தன் துயரைத் துடைத்துக்கொள்ள முயலவில்லை. மாறாக, ஏழைகளுக்கு இதம் தரும் தொண்டாற்றினால், அதன்மூலம் இறைவனுடைய அருளைப் பெற இயலும் என்று எண்ணி, மும்முரமாக அந்தப் பணியில் ஈடுபடலானான்.

ஏழை மக்களின் இருப்பிடம் தான், சேச்சே! எவ்வளவு கேவலமாக இருக்கிறது! எங்கும் ஒரே அசுத்தம்! நோய் அவர்களைப் பிய்த்துப் பிடுங்காமலா இருக்கும்! படுகுழிகள்! அதன்மீது படுதாக்கள் போர்த்தப்பட்டுள்ளன. இந்தச் சேரிகளை ஒழித்திடவேண்டும். இந்த 'நரகத்துக்கும்' ஏழைகள் எவ்வளவு 'வாடகை' கொட்டி அழ வேண்டி இருக்கிறது, பணம் பிடுங்கும் செல்வர்களுக்கு! இந்த அக்ரமத்தை ஒழித்துக்கட்ட வேண்டும். ஏழைகளைக் கசக்கிப் பிழியும் கொடுமையாளர்களிடமிருந்து மீட்கும் திட்டம் காணவேண்டும். மலிவான, அதேபோது சுத்தமான விடுதிகள் அமைக்கவேண்டும். ஏழைகளின் வாழ்வில் ஒரு குளிர்ச்சியும் மலர்ச்சியும் காணவேண்டும்—என்று எண்ணினான் அந்தனி.

லாண்டிரி் என்பான் கட்டிட வேலையில் நிபுணன், அந்தனிக்கு நண்பனானான். திறமையுள்ளவன் மட்டுமல்ல, புதிய தத்துவங்களில் நாட்டமுள்ளவன், லாண்டிரில்.

மக்கள் பணியே மகேசனுக்கு உகந்த பூஜை!

ஏழைகள் இதயத்தில் களிப்பூட்டும் பணிபுரிதலே பகவானுக்குத் தேர், திருவிழா, யாவும்!

தூய உள்ளமே கோயில்! நலிந்தோரைத் தேற்றுவதே தோத்திரம்!

மக்களிடம் சகோதரத்துவம் மலரவேண்டும்; அதற்கு அன்பு ஆட்சி செய்தல் வேண்டும்.

ஒரு பகுதி மக்களைச் சேற்றிலும் சகதியிலும் நெளியும்படி விட்டு வைப்பது, சமுதாய முழுவதையுமே நாசமாக்கும்.

பிறரையும் மகிழ்ச்சியுடன் வாழச் செய்தால்தான், நாம் மகிழ்ச்சியுடன் வாழ முடியும்.

இவைகளே, லாண்டிரிப்போற்றி வளர்த்துவந்த கருத்துக்கள்.

சர்வ வல்லமை உள்ளவர், சர்வேஸ்வரன்,ஏன் மனிதனை, அறிவுச் சூனியனாகவும் குற்றங்கொள் கலமாகவும் படைக்கவேண்டும்!

சுயநலம், பேய்க்குணம், வெறிச் செயல், இவைகளிலே மூழ்கிடும் போக்கினனாகும் நிலையில் மனிதனைப் படைக்காமல், துவக்கத்திலேயே மனிதனை, 'நித்யானந்தத்தை' அனுபவிக்கத்தக்க, ஆற்றலைப் பெறக்கூடியவனாகவும், அருங்குணவானாகவும், ஏன் படைத்திருக்கக்கூடாது!

இது, அந்தனியின் மனதிலே நீண்ட நாட்களாக இருந்து வரும் சிக்கல்.

கிருஸ்துவின் புனிதக் காதை மூலம், இந்தச் சிக்கலைப் போக்கிக் கொள்ள முடியவில்லை. கிருஸ்துவின் புனித மொழிகளின்படி நடந்துகொள்பவர்களே, மிகமிகக் குறைவு! மேலும், தவறுகளைச் செய்துவிட்டுப் பிறகு அதனைத் திருத்தும் நிலையில் ஏன் கடவுள் இருக்கவேண்டும், முறை அல்லவே என்று அந்தனி எண்ணினான்.

லாண்டிரி சொன்னான் "நான் வணங்கத்தக்க கடவுள் ஒருவர் உண்டு; பூவுலகத்தையும் பரமண்டலத்தையும் சமைத்தவர் அல்ல அவர்; விண்மீன்களையும் பிரபஞ்சத்தையும் படைத்தவரல்ல! கடியாரம் காண்கிறோம், அதை ஆக்கினவன் ஒருவன் உளன் என்பது அதன் மூலம் தெரிகிறது, என்கிறார்கள். தத்துவம் சரி! ஆனால் என் உள்ளத்துக்கு உகந்த ஈசன், பிரபஞ்சத்தைப் படைத்த பெரியவன் அல்ல, ஆக்கவும் அழிக்கவும் வல்ல பரம்பொருள் என்கிறார்களே, அதனிடம் என் மனம் இலயிக்கவில்லை. உலகின் கேடுகளைக் களைந்திட, உழைத்திடும் உத்தமனாகவும், அந்தத் திருத்தொண்டிலே, என்னைப் பங்கு கொள்ளும்படி செய்பவனாகவுமுள்ள, காப்பாளனை, உழைப்பாளனை, நான் கர்த்தனாகக் கொள்கிறேன். இது நாள் வரையில், மக்கள், தங்கள் மனதிற்குப் பட்ட வகையிலே தாமே ஆக்கிக் கொண்ட கடவுளைத் தொழுது வருகிறார்கள்; சர்வசக்தி வாய்ந்தவர்! தேஜஸ் மிகுந்த தேவாதி தேவன்! வரம் அருளும் வல்லமை படைத்தோன்! தீயோரைத் தண்டிக்கும் ஆற்றல் மிக்கோன்! என்றெல்லாம் பூஜிக்கிறார்களே, அந்தக் கடவுளை அல்ல நான் தொழுவது. என் 'கடவுள்' கேட்ட வரம் அருளுபவரல்ல, அவர் என்னிடமிருந்து, அன்பு, நேர்மை, தூய்மை இவைகளைக் கேட்பவர், என்று கூறினான். அந்தனியின் மனதிலே புதிய கருத்துகள் தூவப்பட்டன என்றே சொல்லாம். கடவுளைப் பற்றிய கருத்துரைகளில், இது அந்தனிக்கு ஒருவகையில் பிடித்திருந்தது.

*

எலினார், பிழைத்துக்கொண்டாள். ஆபத்து, விலகிவிட்டது. அந்தனியின் உள்ளத்திலே சொல்லொணாத மகிழ்ச்சி. ஆண்டவன் அருள் பாலித்துவிட்டார். நான், ஏழைகளுக்காகத் தொண்டாற்றினேன், தூயவர், என்பால் திருநோக்கைத் திருப்பி, என் ஆவியை என்னிடம் ஒப்படைத்துவிட்டார்; என் இதயராணி பிழைத்துக் கொண்டாள். பெரியவர்கள் சொல்லிச் சென்ற தத்துவங்கள் முற்றிலும் உண்மைதான். சத்ய வாக்குத்தான் அவை.

நீ இன்னின்ன நல்ல காரியங்களைச் செய், நான் அதற்கு ஈடாக உன் மனைவிக்கு வந்துற்ற ஆபத்தைப் போக்குகிறேன், என்ற முறையில் ஆண்டவன் நடந்து கொண்டாரே, வியாபார ஒப்பந்தம் போலல்லவா இது இருக்கிறது—சரியாகுமா இந்த முறை—என்று கேட்பர்; ஒப்பந்தம் என்றே வைத்துக்கொண்டால்தான், என்ன தவறு! எனக்கு எலினரிடம் உள்ள பாசத்தையே சாக்காக்கிக் கொண்டு, கடவுள், என் மூலம் ஏழைகளுக்கு நலன் கிடைக்கச் செய்திருக்கிறார்; இதிலே என்ன குற்றம் காணமுடியும்! என் மக்களுக்காக நீ, இன்னின்ன நலன்களைச் செய்துகொடு, நான் உன் இல்லக்கிழத்தியின் இன்னுயிரை மீட்டுத் தருகிறேன் என்று கடவுள் கூறுகிறார் என்றே வைத்துக் கொள்வோம்; இதிலே தவறு என்ன—என்று அந்தனி எண்ணி மகிழ்ந்தான். ஆனால் மகிழ்ச்சியும் திருப்தியும் நிலைத்து நிற்கவில்லை. மீண்டும், அந்த நீண்டகாலச் சிக்கல்தான் தலைதூக்கிற்று.

எல்லாம் சரி, ஏன் சர்வேஸ்வரன் தன் சிருஷ்டியான கேவலம் மனிதனுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளுகிற முறையில் நடந்து கொள்ளவேண்டும், விநாடிப் போதில் அவர் விரும்பினால், சாதிக்கக்கூடிய காரியங்களை, ஏன் ஆண்டவன், சுற்றிவளைத்து நிறைவேற்றப் பார்க்கிறார்? துவக்கத்திலேயே, எதையும் குற்றமற்ற முறையிலே படைத்திருக்கலாமே, ஏன் ஆண்டவன் சிருஷ்டியிலே ஆயிரத்தெட்டு அலங்கோலங்கள், மனிதனை இரத்த வெறி கொண்டலையும் நிலையில் படைத்திடுவானேன், பிறகு அந்த வெறியை ஒழித்து அவனைச் சன்மார்க்கத்தில் செல்லச் செய்வதற்கு, பல்வேறு வழிவகைகளை அருளுவானேன் — அந்தனியின் உள்ளத்திலே, எழும்பிய இந்த அலை, அடங்க மறுத்தது.

லாண்டிரிப் சொன்ன கடவுட் தத்துவம் அந்தனியின் உள்ளத்தைத் தொட்டது.

சர்வ வல்லமை உள்ள ஆண்டவன், மனிதனிடம் எதைத்தான் எதிர்பார்க்கவேண்டும், ஏன் எதிர்பார்க்கவேண்டும். மண்பாண்டம் செய்பவனுக்கு எவ்வகையில் நன்றி கூறுவது என்று களிமண் எண்ணுவது போலல்லவா இருக்கும், சர்வேஸ்வரனுக்கு நன்றி கூற வேண்டும் என்று மனிதன் எண்ணினால்.

ஆண்டவனைத் தொழுவது தோத்தரிப்பது, மண்டியிடுவது. இவைகளால் அவருக்கு என்ன பயன், நமது வாழ்த்துதலும் வணக்கமும் அவருக்கு ஏற்றுக்கு. எது எது எப்படி எப்படி நடைபெற வேண்டும் என்பதனைத்தையும் அவர் எப்போதோ தீர்மானித்துத் திட்டிவைத்திருக்கிறார் என்றால், அவருடைய திரு அருளைத் தேடிப் பெறத் தொழுகை நடத்துகிறோம் என்று கூறிக்கொள்வதிலே பொருள் என்ன இருக்கிறது.

## தானிக்குப்பேர் ஏமி?

**டில்லி மந்திரி பண்டித பந்தும் ஒப்புக்கொள்கிறார் — ஏதாவது ஒரு வேலை செய்வதென்றால் அதை ஒரு இடத்திலிருந்துதான் ஆரம்பிக்க வேண்டும்! அதைக் கண்டு 'வடக்கே தான் எல்லாம். தெற்கே ஒன்றுமில்லை, என்று கூறுதல் கூடாது எனக் கூறுகிறார்! ஐந்தாண்டு திட்டத்தில் பிர்மாண்டமான திட்டங்கள், வடக்கில் மட்டும் உள்ளனவே தெற்கிலில்லையே, என்பதற்குத்தான் இந்தப் பதில். 'ஏன், வடக்கேயிருந்து ஆரம்பிக்க வேண்டும்? அதை தெற்கிலிருந்து ஏன் ஆரம்பித்திருக்கக் கூடாது? அதை ஏன் செய்யவில்லை!' இப்படி யாரும், பார்லிமெண்டில் கேட்கவில்லை!**

இத்தகைய கடவுட் கோட்பாட்டைவிட, லாண்டிரிப் கூறுவது, பொருத்தமுடையதாகத் தெரிகிறது.

மனிதனுக்காகப் பாடுபடும் மாவீரனாக, மனிதனை நேசிக்கும் தோழனாக, மனிதனை மாண்புள்ளவனாக்கும் மகத்தான சேவை செய்யும் நண்பனாகக் கடவுளைக்கொள்வது, சாலச் சிறப்புடையதாகத் தெரிகிறது. அத்தகைய ஈசனை அறியமுடிந்தால்? இன்பம்தான்.

*

இங்ஙனம் ஒவ்வொரு சம்பவத்தின்போதும், அந்த அடிப்படைக் கேள்விதான் கிளம்பிற்று. ஏன் ஐயனுடைய சிருஷ்டியிலே இவ்வளவு அலங்கோலம். ஏன், கொடுமைக் குணங்களைப் பிறந்திடச்செய்கிறார், பிறகு மனிதனைக் கொடுமையாளனாகாதிருக்க வேண்டுமென்று விரும்புகிறார்? அந்தனிக்கு இது, ஆண்டவன் வேண்டுமென்றே எடுத்துக்கொண்ட வீண் வேலை என்று தோன்றிற்று. பாதிரிமார்களால்; சிறுவனாக அவன் இருந்த நாட்களிலேயே, விளக்கமளிக்க முடியவில்லை. இப்போது அவர்கள் எப்படிப் பதிலளிப்பார்கள்:

பெட்டி, பலநாடுகள் சென்று வருவது வாடிக்கை.

பெட்டிக்கு, மணமாகவில்லை— அந்த நினைப்பும் எழவில்லை. எனவே, அடிக்கடி, பலநாடுகள் சென்று, அறிவுக்கு விருந்து பெற்று மகிழ்ந்தாள். ஒரு நாள், அவளிடம், அந்தனி, இந்த அடிப்படை விஷயமாகப் பேசும்போது, அவள் ஒரு விளக்கமளித்தாள்.

*

சில ஆண்டுகளுக்கு முன்பு நான் சான்பிரான்ஸிஸ்கோ விலிருந்து ஹாங்காங் போகையில், ஒரு சீனக் கனவானுடன் உரையாடும் வாய்ப்புக் கிடைத்தது. மனிதனுடைய முன்னேற்றத்துக்குப் பெரிய தடைக்கல்லாக இருப்பது கடவுள்தான் என்று அந்த சீனப் பெரியவர் சொன்னார். நான் திகைத்துப் போனேன்.

“தனக்காக வேண்டியதனைத்தையும் கடவுள் தருவார்.

நமக்கெல்லாம் புரியாத ஒரு முறையிலே, கடவுளின் திருவருள் வேலைசெய்கிறது, அதன் விளைவாக, பூலோகம் சுவர்க்க பூமியாகப் போகிறது.

மனிதன் செய்யவேண்டியதெல்லாம், பொறுத்திருக்க வேண்டும், பகவானிடம் நம்பிக்கை வைத்திருக்கவேண்டும். அவ்வளவுதான்.

இங்ஙனம், மனிதன் வெறும் கருவி, ஆண்டவன் ஆட்டிவைக்கிறபடி ஆடும் பதுமை என்று நம்பித்தான் மனிதன் நாசமாகிறான்.

மனிதன், கடவுளின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு சோம்பிக்கிடப்பதை விட்டு முயற்சியில் ஈடுபடுவானானால், மண்ணுலகில் விண்ணுலகம் காணலாம். ஆனால் அதற்கு, மனிதன், தன்னலத்தை விட்டொழிக்க வேண்டும். அது கடினமானது; எனவே மனிதன், எளிதான வழி தொழுது கிடப்பது, தேவன் எதையும் தனக்காகச் சாதித்துத் தருவான் என்று நம்பிக் கிடப்பது என்ற நிலைக்கு வந்துவிட்டான். அதனாலேயே மனிதகுல முன்னேற்றம் குந்தகப்படுகிறது. கடவுளைத் தேடித் தேடி, இல்லை என்று தெரிந்து கொள்கிறான.

கடவுள், நம் உள்ளத்திலல்லவா இருக்கிறார்.

நாம்தான் கடவுள்! மனித சக்தி மட்டற்றது. மனிதன் தன் தீய நினைவுகளைக் கட்டுக்குள் கொண்டு வரவும், களையவும் பழகிக்கொண்டால், விண்ணுலகு, மண்ணுலகில் மலரும்.

தன்னலத்தைத் தகர்த்தெறிவது, சாத்யமானதுதான். வரலாறு மனிதனுடைய பாதகச் செயலையும் தவறுகளையும் காட்டும் களஞ்சியம் தான் என்றாலும், மனிதகுல முன்னேற்றத்துக்குத் தடைகளாக உள்ளவைகளை மனிதனால் தகர்த்தெறிய முடிந்தது என்பதை விளக்கும் சம்பவங்களும் அதிலே சுடர்விட்டுக் கொண்டுள்ளன.

அன்பு! இதைத்தான் அனைவரும் உபதேசித்து வந்தனர். அன்பு காட்டுவது எளிதுதான்— வெறுப்பை மனிதன் சிரமப்பட்டு உள்ளத்தில் வளர்த்துக்கொண்டு வருகிறான், சிறிதளவு முயற்சி எடுத்துக்கொண்டாலும், அன்பு உள்ளத்தில் ஆட்சி புரியும். இப்போது சிறுபிள்ளைப் பருவமுதல், வெறுக்கக் கற்றுத் தரப்படுகிறது.

அன்புடன் வாழவேண்டிய மக்களிடம், இனம், நிறம், நாடு, மதம், எனும் பல்வேறு காரணங்காட்டி வெறுப்பை ஊட்டி ஊட்டிக் கெடுக்கிறோம். அன்பு அரசோச்சினால் அவனியே சுவர்க்கமாகும். ஐயன் செய்து தருவார் என்று இராமல், மனிதன் முயற்சிக்க வேண்டும், அவனால் முடியும், அவன் வெற்றி பெறத்தான் போகிறான்”

சீனப் பெரியவர் சொன்ன சித்தாந்தத்தை பெட்டி, இவ்வாறு விளக்கியது அந்தனிக்கு, ஓரளவுக்கு ஆறுதல் அளித்தது.

கடவுள் பற்றி எவ்வளவு கருத்தற்ற கொள்கைகளை மனிதகுலம் கொண்டிருக்கிறது, என்பதைச் சீனப் பெரியவர் எடுத்துக் காட்டினார். இதையே இப்போது நாம் கூறும்போது சிலர்கள் சீறுகிறார்கள்—ஆதீனங்கள் ஆத்திரமடைகின்றன — ஆஸ்திகர்கள் — அடி, உதை, என்றே கிளம்புகிறார்கள்.

*

பெட்டி, பேசியது கேட்ட அந்தனி சிந்தித்தான். மனதிலே புகுந்துவிட்ட புனிதம், பற்றி அவன் பேசலானான்.

“உடைமைகள் அனைத்தையும் விற்று, ஏழைகளுக்குக் கொடுத்துவிடு, என்று ஏசுநாதர் ஒரு இளைஞருக்கு உபதேசித்தாரே, பெட்டி! ஏழைக்காக அல்ல, அந்த இளைஞனுடைய நலனுக்காகவே ஏசு அதுபோல் கூறினார் என்று நான் சில வேளைகளில் எண்ணுவதுண்டு. ஏழைக்கு அந்த இளைஞன் தானம் தந்தால், ஏழையின் அல்லல் ஒரு கணம் துடைக்கப்படும். ஆனால் அந்த இளைஞனுக்குக் கிடைக்கும் பலனோ, மகத்தானது. அவன் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுகிறான். அவனைப் பிணைத்துவைக்கும் பொருளை எல்லாம் அவன் நீக்கிவிட்டதும், நிம்மதி பெறுகிறான், உடைமைகளால் உள்ளத்துக்கு ஏற்பட்ட சுமை ஒழிந்துபோகிறது, விடுதலை கிடைக்கிறது,

நான், சாத்தான் இருப்பதை நம்புகிறேன், பெட்டி! நாம் பாசுரங்களில் குறிப்பிடுகிறோமே, அந்தச் சாத்தான் அல்ல—கடவுள் சன்னிதானத்தில் கலாம் விளைவித்து அவரால் பூலோகத்துக்கு விரட்டப்பட்டுக் கிடக்கும் சாத்தான்

அல்ல—நம்மிடம் குடிகொண்டிருக்கும் தீய குணத்தைக் குறிப்பிடுகிறேன்.

வெறுப்புணர்ச்சி, பேராசை போன்ற தீய குணங்களை நமக்குத் தந்தது யார்?

மனிதன், கடவுளின் கட்டளைக்கா, சாத்தானுடைய கட்டளைக்கா, எதற்குக் கட்டுப்படுகிறான்? குழப்பம் ஏற்படுகிறது.

பெட்டி! தன்னலமறுப்புதான், சாத்தானை விரட்டும் வழி—உய்யும் மார்க்கம்.

நாம் போராட வேண்டும், கடவுளுக்குத் துணையாக நின்று போராடவேண்டும்.

சிலர் இந்தத் தூய பணிபுரியக் கிளம்பினால் போதும், பிறர் பிறகு வருவர்.

இன்பலோகமாம் சுவர்க்க பூமியில் இடம் பிடிக்க அல்ல, பெட்டி, உலகைக் காப்பாற்றப் பணியாற்ற வேண்டும்.

தீயகுணம் எப்படியும் தன்னால் மடிந்தொழியும், கடவுள் அதனை ஒருநாள் ஒழித்தே தீருவார் என்று எண்ணிப் பயனில்லை, தீய குணத்தை ஒழித்திட நாம் தீவிரமாகப் பணியாற்றித் தீரவேண்டும். கடவுள், தீய சக்திகளை ஒழிப்பதில் வெற்றி பெறவில்லை. அவரை மூலைக்கு ஒடுக்கிவிட்டு, தீய சக்தி, மணிமாடத்தில் கொலுவிருக்கிறது. எனவே கடவுளின் காரியத்தைச் செய்ய, தன்னலத்தை விட்டொழித்துப் பணிபுரியவேண்டும். துறவிகள் வேண்டும்."

*

அந்தனி, விளக்கம் பெற்றுவிட்டான் என்பதை மட்டும் இச்சம்பவம் காட்டவில்லை, அவன் தன்னலமறுப்புக்குத் துணிந்துவிட்டான் என்பதையும் இந்த உரையாடல் எடுத்துக் காட்டிற்று. பெட்டி, அவன் உள்ளத்தில் பெருநெறி தவழ்வதை உணர்ந்தாள்; வாழ்த்தினாள்.

வெற்றி கிடைத்துவிட்டது' போர் முடிந்துவிட்டது. எல்லாவற்றையும் துறந்துவிடுவது என்ற முடிவுக்கு அந்தனி வந்தாகிவிட்டது. உலகின் செல்வம் அனைத்தையும் குவித்து ஏழைகளுக்குப் பகிர்ந்து அளித்தாலும், மீண்டும் தொல்லையும் துயரமும் தலைவிரித்தாட அதிககாலம் பிடிக்காது. தன்னலம் தலைதூக்கும். பேராசை பேயாட்டமாடும்."

ஏழைகளுக்குக் காசு வீசிடும் கருணாமூர்த்திகள், பன்னெடுங்காலமாகவே இருந்துவருகிறார்கள். ஏழைகள் தொகையோ வளர்ந்துகொண்டே இருக்கிறது. பணம் சர்வரோக நிவாரணியல்ல. சேவை, தன்னலமறுப்பு இவை மூலமாகவே பலன்காண முடியும்.

எனவே, நான், என் தாயார் வசிக்கும் விடுதிக்குப் பக்கத்தில், ஒரு சிறு குடிலை வாடகைக்கு எடுத்துக்கொண்டு அங்குதான், ஏழைகளின் தோழனாக வாழ்க்கையைத் துவக்கப் போகிறேன், அவர்களுக்கு உதவி செய்வதே வாழ்வின் குறிக்கோளாக்கிக்கொள்வேன். புரட்டர்களிடம் அவர்கள் சிக்காதபடிபார்த்துக்கொள்வேன். வழக்குகள் ஏழைகளுக்குள்கிளம்பினால், வழக்கறிஞனான நான், சமரசம் செய்துவைப்பேன். என் தேவைக்கானதை நான் சம்பாதித்துக்கொண்டு எளியோருடன் எளியோனாக வாழ்க்கை நடத்தப்போகிறேன்.

மனைவிமக்கள் இல்லாத துறவிகள் மட்டும் போதும், தூய்மையையும் வாய்மையையும் வெற்றிபெறச் செய்ய என்று கொள்வதற்கில்லை. குடும்பத்துடன் உள்ள துறவிகள் தேவை. நான் அத்தகைய துறவி ஆகப் போகிறேன.

*

எலினர், எளிய வாழ்க்கையில் ஈடுபட, எல்லாம் இருந்தும் அனைத்தையும் துறந்துவிட்டு அன்றாடம் தேடிப்பெற்று வாழ்க்கை நடத்துவதை ஏற்றுக்கொள்ளுவாளா! செல்வத்தைக் கண்டவள்! சுகத்தை அறிந்தவள். . எப்படி இவைகளை விட்டுவிட மனம் வரும், என்றெல்லாம் அந்தனி எண்ணிக் குழப்பமுற்றான். ஆனால் அந்தக் குணவதியோ, அவன் கூறியதே செந்நெறி என்று உணர்ந்தாள்; தன்னல மறுப்பு, ஏழையருக்குத் தொண்டாற்றுதல், உடைமைகளைக் கட்டிக்காத்து அவைகளுக்கு அடிமையாகிச் சிதைந்து போகாதிருத்தல், இவையே உண்மைத் துறவின் இலட்சணம், என்பதை, அந்தனி மூலம் அறிந்தாள்; அகமகிழ்ச்சியுடன், அவன் துவக்கத் தொடங்கிய புதிய வாழ்க்கையில் துணைநிற்க இசைந்தாள். துணைவியுடன் ஏழையர்க்குத் தொண்டாற்றக் கிளம்பினான், அந்தத் துறவி.

*

தம்பி, 'தருமபுரத்தை'க் கண்ட அன்று, நான் கதையில், இந்தத் 'துறவி'யைச் சந்திக்கிறேன் என்றால், என் உள்ளம் எப்படி இருந்திருக்கும் என்பதை எண்ணிப்பார்!

"வயலூரிலிருந்து நெல் வண்டிகள் வந்துவிட்டனவா?

கோட்டையூரார் குத்தகைப் பணத்தைக் குறைவின்றிக் கொடுத்துவிட்டாரா?

பட்டணப் பிரவேசத்துக்கு இந்த ஆண்டு, செலவு எவ்வளவு என்று புள்ளி போட்டாகி விட்டதா?

வாழைத் தோட்டத்திலே புதிய வாயற்படி வைத்தாகி விட்டதா?

---

3-பக்கத் தொடர்ச்சி

இதுதான் பேசப்பட்டு வருகிறதே, சுமார் 50 ஆண்டுகளாக.

முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் அதை ஒழிக்க, யார் தடையாக இருக்கிறார்கள், பண்டித நேருவுக்கு? யார் அந்தக் கூட்டத்தார்? யார்?

நேரு வெளிப்படையாகச் சொல்ல மாட்டார்—ஆனால், நாம் துணிந்து சொல்லுகிறோம், சாதி ஒழிப்புப் பிரச்னையில் அக்கரை கொண்டிருப்பதாக வேஷம் போடும் பார்ப்பனீயமும்—பழமைக்கும் புதுமைக்கும் இடையில் 'ஊசலாடும்' உள்ளங்கொண்டோரும்தான், இன்று, முன்னேற்றத்தைத் தடுக்கும் சனியன்களாக இருக்கிறார்கள்.

அவர்களிருப்பதால்தான் ஹாலாவே சிரிக்கிறான், ஏளனம் செய்கிறான்.

அதைப்பார்த்து 'இந்து'க்களுக்குக் கோபம்வந்து பிரயோசனமில்லை — ஆவணி அவிட்டமும், 'அவாள் நாம்' எனும் பேச்சும், ஆச்சாரிய நோம்புகளும், வருணாசிரம தர்மம் பற்றியவியாக்யானமும் செய்யும் விபரீதப் புத்திகள் மாண்டு மடிய வேண்டும் — பார்ப்பனகுல அதிபர்களுக்கு.

அதுதான் இல்லையே! இப்படி வாழ்வதுதான் இந்தியக் கலாச்சாரமாமே!! ஏன் சிரிக்கமாட்டான், ஹாலோவே?

★

முல்லைத் தோட்டத்திலே ஊஞ்சல் அமைத்து விட்டார்களா?

சென்னை வழக்கு எந்தக் கட்டத்தில் இருக்கிறது?

கல்கத்தாவிலிருந்து மருந்து பார்சல் இன்று வந்துவிட்டதா?

கனகாம்பரக்கலர் ஆடை வாங்கியாகி விட்டதா?

கைவளைகள் எங்கே? தோடு மேலும் இரண்டு ஜதை வேண்டும்! தொங்கட்டம், பார்வையாக இல்லை!

தில்லைத்தாதன், வந்ததும் எனக்குச் சொல்லு.

கொல்லைப்புறக்கதவைத் தாளிட்டு விடவேண்டாம்.

பல்லைக்காட்டி நிற்கும் பாக்கியத்துக்கு, பத்து கொடுத்துத் துரத்து.

ஏன், உரத்தகுரலில் கத்திக் கத்தி என் உறக்கத்தைக் கெடுக்கிறார்கள், நால்வரின் பாடல்களை மனதுக்குள் படித்திடச் சொல்லு.

இன்றையத் துறவிகள் இங்ஙனம் பேசி இருந்திடக் காண்கிறோம்.

கதை மூலம், உண்மைத் துறவி எங்ஙனம் இருத்தல் வேண்டும் என்பது குறித்து ஒரு ஆங்கில ஆசிரியர் காட்டுகிறார்.

வெட்கப்படுவதா, வேதனைப் படுவதா.—என்றுதான் தம்பி, உன்னைக் கேட்கிறேன். நமது இயக்கத்தால் நாட்டிலே நாத்திகம் தலை விரித்தாடுகிறது என்று நாப்பறை கொட்டும் நல்லவர்களைக் கேள் தம்பி, துறவியின் இலட்சணம் என்ன என்று. காதிலே குண்டலம், கழுத்திலே தாவடம், சேவடியில் பாதுகை, உடலில் காவி, என்று கூறுவர், சரி, ஐயன்மீர்; கோலம் கிடக்கட்டும், உள்ளம் எப்படி இருக்கவேண்டும் என்று கேள்.

உடமைகள், அவை பற்றிய உரிமைகள், இவை பற்றிய எண்ணம் கொண்டிருப்பது, துறவு ஆகுமா? என்று கேள்.

இன்றைய ஆதீனங்கள் அந்தனி போன்ற துறவுகொண்டு தூய்மையான தொண்டாற்ற முன்வரு வரா என்று கேள்.

சிவனருளால், எமது காலம் வரையில், இந்தச் சுகபோகம் நிலைத்து இருந்தால் போதும், என்று எண்ணுவோரும், விடை ஏறும் பெருமானுடைய அருளால், வழக்கும் வல்லடியும் தாக்காதிருந்தால் போதும் என்று எண்ணுவோரும் துறவிகளாகத் 'தர்பார்' நடத்த அல்லவா காண்கிறோம்.

தம்பி, நான் ஏட்டிலே சந்தித்த துறவியை நாட்டிலே காணவிழைகிறேன். உனக்கும் அப்படித்தான் தோன்றும், தேடினால் கிடைப்பார்களா என்று எண்ணுவதைவிட, தம்பி, நாம், அப்படிப்பட்ட 'துறவி' களாகிவிடவேண்டும்குடும்பம்இருக்கும், குடிகெடுக்கும் எண்ணம் இருக்காது, துணைவி இருப்பாள், நமது தொண்டுக்குத் துணைபுரிய, குழந்தைகள் இருக்கும், அன்புக்கான அரிச்சுவடியை உணர்த்த, தொழிலில் ஈடுபடுவோம், வாழ்க்கை நடத்த, ஆனால் உடைமைகளுக்குக் கட்டுப் பட்டுவிடாமல், தன்னலத்துக்கு ஆட்பட்டு விடாமல், சுக போகத்திலே ஆழ்ந்து விடாமல், வலியோர் சிலர் எளியோர் தமை வதையே புரிகுவதா, என்று கேட்கும் ஆற்றலையும், அத்தகைய கேட்டினைக் களைந்திட அறப்போர் நடாத்தும் திறத்தினையும் பெற்று; மடம் தேடாமல், தாவடம் அணிந்த சடம் ஆகாமல், காவிதேடாமல், அதனுள் மறைந்திடும் காமி ஆகாமல், தொண்டாற்றும் துறவியாக, மோட்ச சாம்ராஜ்யத்திலே இடம் பிடிக்க அல்ல, நமது இதயத்திலே அன்புக்கு இடமளித்து, அற நெறியை நாட்டிலே புகுத்தி, மக்களைப் புதியதோர் இன்பம்பெறச் செய்யும் புனிதத் தொண்டாற்றும் துறவி யாகவேண்டும். நாட்டிலே இத்தகைய துறவிகளே இன்று அவசர அவசரமாகத் தேவை. ஏழையின் அழுகுரலை, எளியோரின் கண்ணீரை, பதிகம்பாடியும் மணி அடித்தும் போக்கிடமுடியாது, தம்பி! முடியாது. துறவிகள் வேண்டும், புதிய துறவிகள். வெள்ளை உடைபோதும், காவிதேடி அலைய வேண்டாம். காவிகளைத்தான் பார்க்கிறோமே,

அளக நிரை குலைய விழி
குவிய வளை கல கலென
அமுத மொழி பதறி யெழ
அணியாரம்

அழகொழுகு புளகமுலை
குழைய இடை துவளமிக
அமுத நிலை அது பரவ
அதி மோகம்

உள முருக வரு கலவி
தரு மகளிர் கொடுமையெனு
முறுகபட மதனில் மதி
அழியாதே

என்று உலகுக்கு உருக்கமாக உபதேசம் செய்துகொண்டிருக்கிறார்கள். உபதேசம்!

நாம், தொண்டாற்றும் துறவிகளாக வேண்டும்.

தருமபுரத்தையும் கண்டுவிட்டு, அந்தனி ஜான் என்ற ஏட்டையும் படித்த பிறகு, இந்த எண்ணந் தான் எனக்கு ஏற்பட்டது.

அன்பன்,

**அண்ணாத்துரை.**

## மந்தைச் சுபாவம்

மந்தைச்சுபாவம் இருக்கிறதே, அது, ஐசுவரிய நாடான அமெரிக்காவிலும் போகவில்லை, இன்னும்! கொமாஞ்சி எனும் இடத்தில், ஒரு பால்காரரின் தோட்டத்தில் யுரேனிய மண் இருப்பது தெரிந்ததாம். அந்த மண்ணில் உட்கார்ந்தால், வாதநோய் தீரும் என்று யாரோ, சொல்லியதை நம்பி, ஒருபணக்காரர் வந்தாராம். அவர் சொல்லியதைக் கேட்ட பால் காரருக்கே ஒன்றும் புரியவில்லையாம்! எவ்வளவோ சொல்லியும் அந்த இடத்தில் உட்கார்ந்தே தீருவேன் என்று பிடிவாதம் செய்தாராம். கொஞ்சநேரம் உட்கார்ந்துவிட்டு, அதற்குரிய கட்டணம் என்று ஒரு தொகையையும் கொடுத்து விட்டுப்போனாராம். செய்தி, காட்டுத்தீப்போல பரவவே ஏராளமான நோயாளிகள் தினந்தோறும் யுரேனிய மண்இருந்த பள்ளத்தில் உட்கார, கூட்டம் கூட்டமாக வர ஆரம்பித்தார்களாம். இதைக் கண்ட அந்தப் பால்காரருக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லையாம்! ஐயா! இந்தப்பள்ளத்தில் எந்தவித மந்திர சக்தியும் இல்லை. உட்கார்ந்தவர்களில் யாருக்கும்நோய் குணமான தாகவும் தெரியவில்லை, என்று சொல்லியும், வருவோர் கேட்கவில்லையாம். அதைக் கண்ட அந்தப்பால்காரர், "நானாகவே தான் இந்தப்பண்ணைக்கு வந்தேன். என்னை யாரும் அழைக்கவில்லை. இந்தயுரேனியப் பள்ளம் பற்றியாரும் எங்களிடம் சொல்லவில்லை" என்று ஒரு பத்திரம் எழுதி ஒவ்வொருவரிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டு பிறகே அனுமதிக்கிறாராம். மக்களை ஏமாற்றியதாகத் தன்மீது சர்க்கார் நடவடிக்கை எடுத்துவிடக் கூடாது பாருங்கள், அதற்குத்தான் இந்த முன்யோசனை!! இந்த அதிசயம் பற்றி வாஷிங்டனில் உள்ள அணுசக்தி ஆராய்ச்சிக்கமிஷன், 'அந்த மண்ணில் நோய் தீர்க்கும் குணம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை; என்று அறிக்கைகள் விட்டும், கூட்டம் குறையவில்லையாம். ஐசுவரியபலம் இருந்து...? அறிவொளி பூக்கவில்லையானால், மந்தைச் சுபாவம் மடியாது என்பதற்கோர் எடுத்துக்காட்டாக இருக்கிறதல்லவா-இச்செய்தி!

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்று, ஹாம்டன் நிலைத்து நின்றார். மாமன்றம் இறுதியில் வாகைசூடும். மக்களின் சக்தியை இனி மன்னன் மாய்த்திடுவது முடியாத காரியம் என்பதற்கான நல்ல குறிகளைக் கண்டானபிறகே ஹாம்டன் மாண்டார். அவர் ஆற்றிய பணி அளப்பரிது. அவர் காட்டிய வீரம், மக்களை ஈர்த்தது. மாவீரன் மறைந்தான், கடைசிச் சொட்டு இரத்தத்தையும், மக்கள் பணிக்கே தந்தான்.

மக்களுக்கு மகிழ்ச்சியும் மன்னன் சார்பினருக்கு, மருட்சியும் தரத்தக்க மற்றோர் சம்பவம் இதுபோது நிகழ்ந்தது. நாட்டை அடக்கி ஆண்ட அக்ரமக்காரரில் ஒருவனை, லாட், துக்கிலிடப்பட்டான்.

மக்களை துக்கத்திலாழ்த்திய மற்றோர் சம்பவம் பிம் மரணம். ஹாம்டன் போலவே, முன்னணி நின்று மக்கள் பணியாற்றிய பிம், விடுதலை விளக்கை ஏற்றிவைத்தான், ஆனால் அதன் முழு ஒளியைக் காணும் முன்னம், இறந்து பட்டான். ஓயாத உழைப்பு உடலைத் துளைத்துவிட்டது, நோய் வாய்ப்பட்டு, பிம் இறந்தான், இறவாப் புகழ் பெற்றான பிறகு. மக்கள் பணிக்காகத் தன்னை ஒப்படைத்த பிறகு இம்மாவீரன், சுகமிழந்தான், சொத்திழந்தான், ஓய்விழந்தான், ஓட்டாண்டியுமானான். மக்கள் உரிமை பெறவேண்டும் என்பதன்றி வேறோர் குறிக்கோள் கொண்டானில்லை. நுண்ணறிவும், பொங்கும் ஆர்வமும், பொல்லாங்கைப் பொசுக்கும் தீரமும் படைத்த பிம், கடைசிக் காலம் வரையில், மக்களுக்காகவே உழைத்தான்—வெற்றி கிட்டுவது உறுதி என்ற நிலை பிறந்த பிறகே மறைந்தான்; மறைவதற்கு முன்பு கூட, மக்களுக்கு மகத்தானதோர் நலன் தந்தான்.

எட்வர்டுவாலர் என்றோர் கவிஞன்—கலை உள்ளம் கொள்ளவேண்டியவன், சதிச்செயலில் ஈடுபட்டான்.

இனிக்கப் பேசுவான், எவரிடமும் சாகசமாகப் பழகுவான், தோழமைகொள்வான். இக்கவிஞன், மன்னனுக்காக 'சதி' புரியத் திட்டம் வகுத்தான்.

தித்திக்கும் பேச்சில் வல்ல இவனிடம் ஆடவரும் பெண்டிரும் நேசம் கொண்டனர், படைவரிசையில் பிளவு உண்டாக்குவது, மாமன்றத்தின் வலுவைக் குலைப்பது, மன்னனை அரியாசனம் அமர்த்துவது என்பது கவிஞன் திட்டம். ஆஸ்தானக் கவிஞன் ஆகலாம் என்று கனவு கண்டிருப்பான் போலும்!

டாம்கின்ஸ், என்பான் வாலருக்கு உறவினன். தன் கற்பனைமிக்க கவிதைகளைப் பாடிக் காட்டவேண்டிய கவிஞன், தன் சதித்திட்டத்தை அவனிடம் கூறினான், அவன் ஆதரவு பெற.

மாமன்றத்தின், சம்பளமில்லாத ஒற்றர்கள், எல்லா மாளிகையிலும் இருந்தனர், டாம்கின்ஸ் மாளிகையிலும்!!

சதித்திட்டம் பேசப்படுவதைக் கேட்டுக்கொண்டிருந்த பணியாள், சேதியைப் பிம்முக்கு அறிவித்தான்—மாமன்றத்தார் பாய்ந்தனர், காதகர் சிக்கினர், பத்தாயிரம் பவுன் அபராதம் செலுத்தி, கவிஞன் உயிர்பிழைத்துக் கொண்டான்; சிலர் கொல்லப்பட்டனர்; சதிசிதைக்கப் பட்டது.

மறையுமுன் பிம் ஆற்றிய தொண்டு இது.

மக்கள் அவனுக்கு வீரவணக்கம் செலுத்தினர்—அவன் பட்டிருந்த பத்தாயிரம் பவுன் கடனையும், அவன் சார்பில் மாமன்றமே செலுத்திற்று.

இருமாவீரர், பிம், ஹாம்டன், மறைந்தனர்—ஆனால் அவர்கள் ஊட்டிய ஆர்வம் வளர்ந்தது; மாஸ்டன் மூர், நியூபரி, நேஸ்பி, என்று வெற்றிக் கீதம், மக்களுக்கு விருந்தளித்தது. மிரண்ட மன்னன், ஸ்காட்லாந்துக்காரரிடம் தஞ்சம் புகுந்தான்!

படைபலம்—கடைசி முயற்சி—அதிலேயும் மன்னன் தோற்றான்.

இதற்குப் பிறகு, மன்னன் நிலைமை, கைதியின் நிலைமைதான்—ஆனால் கட்டுக்கு அடங்கிய கைதி அல்ல, தப்பி ஓட முயற்சித்தபடி உள்ள, கைதியின் நிலைமை.

நேஸ்பீ களத்திலே, மன்னன் தோற்றோடியபோது, அவனுடைய கடிதக்கட்டு, மாமன்றப் படையிடம் சிக்கிற்று—மன்னன், வெளிநாட்டவரைக் கொண்டு வரச்சதி புரிவது, சாகசமாக மாமன்றத்தாரை ஏய்க்க விரும்புவது, பிரான்சு சென்றிருந்த தன் துணைவிக்கு எழுதி படையும் கருவியும் சேர்த்திட முனைந்தது, ஆகியவைகள் அம்பலமாயின. எழுபத்து இரண்டு பக்கம் கொண்ட துண்டு வெளியீடு மூலம் மாமன்றம் மக்களுக்கு இதனை அறிவித்தது.

தோல்வியை ஒப்புக்கொள்ளவோ, துயரால் தாக்குண்டு தலைகுனியவோ, மக்களிடம் மல்லுக்கு நின்றது போதும், இனி ஒழுங்கான ஆட்சி நடத்துவதாக உறுதி கூறிச் சமரசம் கோருவோம் என்ற விழைவோ, மன்னனிடம் இருப்பதாகத் தெரியவில்லை. தப்பிச் செல்ல மார்க்கம் கிடைத்தால், மீண்டும் ஓர் முயற்சி செய்யலாம் என்பதே மன்னனுடைய எண்ணமாயிற்று.

நாடு, பெரும் போரிலே சிக்கிற்று—பொருள் சேதம், உயிர்ச்சேதம் ஏராளம்—வரிச்சுமையும்—அதிகம். இந்நிலையில், மாமன்றத்தின் பக்கம் நிற்பவர்கள்கூட, சிறிது சலிப்படைந்திருக்கக் கூடும். இந்த நிலைமையைத் தனக்கேன் வாய்ப்பாக்கிக் கொள்ளக்கூடாது என்பது மன்னன் கருத்து.

சிறைப்பட்டது முதல் சிரம் இழக்கும் வரையில், மன்னன், தப்பிச்சென்று தன் ஆதிக்கத்தைத் திரும்பப் பெற எடுத்துக்கொண்ட முயற்சிகளிலே, முக்கியமான முறை ஒன்று இருந்தது—தன்னை எதிர்த்து நிற்கும் அணியில்பிளவுஏற்படவேண்டும்என்பதுதான் அம்முறை.

ஸ்காத்லாந்துக்காரரை அடுத்து அவர்களின் ஆதரவைப் பெற்றால், அவர்கள் மூலம், பிரிட்டிஷ் மக்களை வீழ்த்தலாம்.

அயர் மக்கள் திரண்டால், அவர்களைக் கொண்டு மாமன்றத்தாரை ஒழிக்கலாம்.

மாமன்றத்திலேயே, பிரிவு தெரிகிறது, அதைப் பயன்படுத்தினால், பலன் காணலாம்.

மாமன்றத்துக்கும் படையினருக்கும் பிளவு வெடிக்கிறது, இதனைப் பயன்படுத்தலாம்.

இன்னபிற எண்ணங்களே மன்னன் மனதில்! தத்துவம் குடைகிறது, என்செய்வான்!

ஸ்காத்லாந்துக்காரர், மன்னனை மீண்டும் ஆதிக்கம் செலுத்தத் துணைபுரிய விரும்பவில்லை; மன்னன் கிடைத்திருக்கிறான், இதனைக் காட்டி, மாமன்றத்திடம் பெரும் பொருள் பெறவேண்டும் என்று எண்ணினர்;

400,000 பவுன்தர மாமன்றம் இசைந்தது, மன்னனை ஒப்படைக்க ஸ்காத்லாந்துக்காரர் இணங்கினர்.

மன்னன் முறியடிக்கப்பட்ட நேஸ்பீ, களத்தருகே, மன்னனுக்குச் சொந்தமான மாளிகையில், சார்லஸ், சிறை வைக்கப்பட்டான்.

மன்னனை அப்போதும் மாமன்றத்தார் மரியாதைக் குறைவாக நடத்தவில்லை, உரிய மதிப்பளித்தனர்—வசதிகள் யாவும் செய்தனர்.

மாமன்றப் படைத் தலைவராக இருந்த பேர்பாக்ஸ், என்பவரே, மன்னனை எதிர்கொண்டழைத்தார்.

மக்கள், சிறைப்பட்ட மன்னனைக் காண வழி நெடுக நின்றனர்—காணக்கிடைக்காத காட்சி அல்லவா!!

(தொடரும்)

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.